உ

ஓம் தத்ஸத் ப்ரஹ்மணே நம:

ஸ்ரீ சதாசிவ யோகீந்திரர்

அருளிச்செய்த

# சிவயோகப்பிரதீபிகை.

இது

தஞ்சைமாநகரம்

ஸ்ரீ பிரஹ்ம நிஷ்ட பண்டித

வெ. குப்புஸ்வாமி ராஜு அவர்கள்

இயற்றிய தமிழுரையுடன்

தஞ்சை

வி. கோவிந்தன் & பிரதர்ஸ் அவர்களாற்றமது

"ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திராசாலையிற்"

பதிப்பிக்கப்பெற்றது.

*Copy Right Registered.*

**1915.**

ராபர் பைண்டு அணா 10.] [காலிகோ பைண்டு அணா 12.

TANJORE MAHARAJA ... RECEIVED 25. MAY 1931 * TANJORE.
94
90
பு. 1454
186
2206



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி.

# முகவுரை.

"மனமே மனிதர்களின் பந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாம்." என்னும் சுருதியினால் விரிந்தமனம் பந்தத்திற்கும் ஒடுங்கியமனம் மோக்ஷத்திற்கும் காரணமாதலின் மோக்ஷத்தை விரும்பிய ஒவ்வொருவரும் சித்தவிருத்தியை ஒடுக்கிச் சிவத்தின்கண் ணிருத்தலாகிய உபாயத்தினைச் செய்யவேண்டும். அதனை யோகமென்பர். அது யோகநூல்களில் பலவாறு விரிந்துகிடக்கினும், அவ்வெல்லாவற்றையும் திரட்டிச் சுருக்கி பரமதயாளுவாகிய * ஸ்ரீ சதாசிவ யோகீந்திரர் தமது அநுபவாநுசாரமாக சிவயோகப்பிரதீபிகை யென்னும் பெயரால் இந்நூலைச் சமஸ்கிருதவாணியில் இயற்றியருளினர். இந்நூலின்கண் மந்திரம், லயம், ஹடம், இராஜ மென்னும் நால்வகையோகங்களைக் கூறியிருக்கினும், மற்றவை இராஜயோகமாகிய சிவயோகத்திற்கே சாதனவடிவா யிருத்தலாலும், சிவயோகமே நேரே சிவபதத்தைத் தருதலாலும் அத்தலைமைபற்றி இந்நூலிற்குச் சிவயோகதீபிகையெனப் பெயரிட்டனர். இதற்குப் படலம் ஐந்துண்டு. சிவயோகத்தினையும் சாங்கியம் தாரகம் அமனஸ்க மென்று மூன்று பிரிவாக்கிக் கூறுகின்றன. இது யோகமுணர விரும்புவோர்களுக்கு மிக்க உபகாரமுடையதெனக் கருதி இதன் மூல சுலோகங்களுக்கு தஞ்சைமாநகரம் பிரஹ்மநிஷ்ட பண்டித ஸ்ரீ மாந் வெ. குப்புசுவாமி ராஜு அவர்களியற்றிய தமிழுரையும் சேர்த்து அச்சிடப்பட்டது. இதன் மூலசுலோகப்பிரதி மிக அருமையாய் பிழைபாடுடையதாய்க் கிடைத்தது. அதன் மொழிபெயர்ப்புப் பிரதிகள் பல பலரிடத்துளவாயினும் அவையும் சந்தேகிக்கக்கூடிய இடங்களில் சந்தேகமாகவே எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்நூல் கூடியவரையில் பல ஆதாரங்களைக்கொண்டு திருத்தப்பட்டது. இதன் மேலும் பெரியோர் சுத்தப்பிரதிகளையும் திருத்தவேண்டியவிஷயங்களையும் அவற்றின் ஆதாரங்களையும் குறித் தெமக்கனுப்புவார்களாயின் அவ்வாறே திருத்தி வெளியிடுவோம்.

வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்.

---

* இவர் வீரசைவமரபினருள் ஒருவர் என்பது இவர் தமது நூலில் பிராணலிங்க,சரணஸ்தலம், வீரசைவன் முதலிய சொற்களைப் பிரயோகித்திருத்தலால் தெரியவருகிறது. இவர் சரித்திரம் விசிதமாய்த்தெரியவில்லை.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | ககூ | तेऽधुना | तेऽधुना |
| உ | கூ | ஷடாக்ஷர | ஷடக்ஷர |
| | உஉ | தெரியதக்க | தெரியத்தக்க |
| ங | உ | साक्षात्कारं | साक्षात्कारो |
| ச | ரு | प्रवर्तये | प्रवृत्तये |
| ரு | ரு | निरूपी | नीरूपी |
| எ | எ | तृणागुल्म | तृणगुल्म |
| | அ | समुद्रांश्च | समुद्राश्च |
| கூ | உ | पूजयेच्छि | पूजयेच्चि |
| கக | கூ | தகாததும | தகாததும் |
| கங | கூ | बूधः | बुधः |
| | கச | हटयोगे | हठयोगे |
| | கஅ | हटः | हठः |
| கச | கச | ग्रहिणा | गृहिणा |
| | | गृहस्मा | गृहस्था |
| | ககா | கிருஹஸ்தகர்களுக் குப்பதுபமும் | கிருஹஸ்தர்களுக்குப்பதுமமும் |
| கஎ | ககூ | प्रशस्तनि | प्रशस्तानि |
| | உ | निर्वृणम् | निर्व्रणम् |
| | ரு | मृधूप | मृदूप |
| | கஅ | கோமபத்தி | கோமயத்தி |
| கஅ | ங | योच्छिन्म | येच्चिन्म |
| ககூ | கூ | मनस्मृतः | मनःस्मृतः |
| | கச | तुथर्कम् | तुर्थकम् |
| உ0 | எ | श्रीगुरुक्त | श्रीगुरूक्त |
| உக | அ | ब्रह्मनाढी | ब्रह्मनाडीं |
| | உரு | பீஙகலை | பீங்கலை |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨௩ | ௧௭ | श्रेष्टं | श्रेष्ठ |
| ௨௬ | ௪ | रन्ध्रे | रन्ध्रे |
| | ௧௯ | प्राप्तो | प्राप्तः |
| ௨௭ | ௨௫ | யோகிந்தர | யோகீந்திர |
| ௨௮ | ௧௪ | சாணைக்கல் | சாணைக்கல் |
| ௨௯ | ௨௧ | सखै | सखे |
| ௩௧ | ௨ | मिष्ठदम् | मिष्टदम् |
| ௩௩ | ௭ | मरुतस्थैर्यं | मरुतः स्थैर्यं |
| | ௧௧ | सुमुत्पा | समुत्पा |
| | ௨௪ | यो वदे | योवदे |
| ௩௫ | ௬ | जिह्वादो | जिह्वादौ |
| ௩௭ | ௨௧ | तथाऽप्रोक्ता | तथा प्रोक्ता |
| ௩௮ | ௪ | முழங்காலை | முழங்கால் |
| | ௧௧ | स्पाटिक | स्फटिक |
| ௪௦ | ௧ | नृणा | नृणां |
| | ௧௨ | सधिः | समाधिः |
| | ௨௦ | वैथैक्य | यैथैक्य |
| ௪௧ | ௯ | नैवोनन | नैवानेन |
| | | पब्रह्म | परब्रह्म |
| | ௧௭ | निद्रा | निद्रा |
| ௪௨ | ௧ | हटेना | हठेना |
| ௪௩ | ௮ | तुल्यो | तुल्यः |
| ௪௪ | ௭ | प्राणेत | प्राणेतु |
| | ௧௨ | संयुक्तो | संयुक्तः |
| ௪௬ | ௪ | परमैकं | परमेक |
| | ௧௪ | हटयोग | हठयोग |
| ௪௮ | ௪ | பிராணயாயம் | பிராணயாமம் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪௮ | ௨௯ | स्वभावम् | स्वभावम् |
| ௫0 | ௧௫ | नानाबेद | नानावेद |
| | ௨௫ | यादेमहा | वादेमहा |
| ௫௧ | ௧ | भेदैः | भेदैः |
| | ௧௯ | त्रिणी | तृणी |
| ௫௨ | ௫ | ऽभश्च | ऽम्भश्च |
| | ௧௧ | உதானன | உதானன் |
| ௫௩ | ௨௧ | प्रक्रेतः | प्रकृतेः |
| ௫௫ | ௨௨ | विसतन्तु | वसतन्तु |
| ௫௬ | ௨ | அதன | அதன் |
| | ௬ | ( ௯௭ ) | ( ௯௭-௯௮ ) |
| | ௧௧ | ( ௯௮ ) | ( ௯௯ ) |
| | ௧௬ | ( ௪௯ ) | ( ௪0 ) |
| | ௨௧ | ( ௪0 ) | ( ௪௧ ) |
| | ௨௨ | षष्ट | षडष्ट |
| ௫௭ | ௧௨ | येद्दष्टि | येदृष्टि |
| | ௨௨ | भवति | भवति |
| ௫௮ | ௮ | सज्ञिकः | संज्ञिकः |
| ௬௨ | ௯ | अ भिन्न | अभिन्न |
| | ௧௪ | सूर्ये | सूर्य |
| | ௧௫ | ाशवालङ्ग | शिवलिङ्ग |
| ௬௪ | ௮ | प्रत्यया—ब | प्रत्ययां—ब |
| | ௬ | வயிற்றில | வயிற்றில் |
| ௬௫ | ௨௧ | हेतु | हेतुः |
| ௬௬ | ௨ | दृश्यये | दृश्ये |
| ௬௮ | ௪ | मोक्षा | मोक्षो |
| | ௧0 | वराग्य | वैराग्य |
| ௬௯ | ௧0 | ऽप्यनमृत | ऽ प्यमृत |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௭௦ | ௧ | नदैहैं | नैर्देह |
| ௭௨ | ௫ | विरचत्य | विचरत्य |
| | ௨௩ | वृति | वृते |
| ௭௩ | ௧௦ | षट्भाव | षड्भाव |
| | ௧௨ | அறுவகை | அறுபகை |
| | ௧௬ | त्क्षणा | तत्क्षणा |
| | ௨௧ | निबि | निविडं |
| | ௨௨ | कर्मे | कर्म |
| ௭௪ | ௭ | யநுமவித்து | யநுபவித்து |
| | ௨௧ | रहस्याि | रहस्यानि |
| ௭௫ | ௪ | ணிடததும | ணிடத்தும் |
| | ௨௨ | முயையே | முறையே |
| | ௨௩ | ஆம்பக்கங்கள் | என்பன |
| ௭௬ | ௫ | विधानां | विधानं |

௨௧. பக்கத்து. ௩௩—௩௪. என்னும் ௨. சுலோகங்களை ஒரு சுலோகமாக்கிக்கொள்க.

ॐ

॥ श्रीदक्षिणामूर्तये नमः ॥

# சிவயோகப்பிரதீபிகை.

## முதற்படலம்.

### மங்கலம்.

परमयोगिमनोम्बुजषट्पदं त्रिविधकारणकारणमव्ययम् ।
सगुणनिर्गुणं अनामयतत्वं गुरुसदाशिवलिङ्गमहं भजे ॥ १ ॥

பரமயோகிகளின் மனோம்புஜ(உள்ளக்கமல)த் திருக்கும் வண்டும், மூவகைக் காரணகாரணமும், அவ்வியயமும், சகுண நிர்க்குணமும், அநாமய தத்துவமுமாகிய குருசதாசிவலிங்கத் தினை யான் பஜிக்கின்றேன். (க)

### பிரதிஞ்ஞை.

श्रीमद्गुरुप्रसादेन योगं ज्ञात्वा शिवात्मकं ।
वक्ष्यामि सुप्रबोधाय शिवयोगप्रदीपिकां ॥ २ ॥

ஸ்ரீ-குருப்பிரசாதத்தினால் சிவவடிவ யோகத்தினையுணர்ந்து இனிதே யுணர்தற்பொருட்டுச் சிவயோகப்பிரதீபிகையினைக் கூறு கின்றேன். (உ)

### கிரந்தாரம்பஹேது.

शिवतत्वविदां श्रेष्ठ वक्ष्यामि शृणुतेऽधुना ।
शिवयोगं परं गुह्यं अपित्वद्भक्तिगौरवात् ॥ ३ ॥

சிவதத்துவத்தினை யுணர்ந்தவர்களிற் சிரேஷ்டனே! சிவ யோகம் மேலான இரகசியமானதாயினும், உனது பக்தி கௌர வத்தினால் இப்போது (அதனை) உனக்குச் சொல்லுகின்றேன் கேள். (ங)

## யோகபேதம்.

मन्त्रो लयो हठो राजा चेतियोगाश्चतुर्विधाः ।
तानाहुः पूर्वमुनयः सिध्दाश्शम्भुप्रबोधितान् ॥ ४ ॥

மந்திரம் லயம் ஹடம் இராஜமென்று யோகம் நானு வகையாம். முன் சிவனால் செவ்வையாய் உபதேசிக்கப்பட்டன வாகிய அவற்றை முநிவரும் சித்தரும் கூறுவர். (௪)

एकाक्षरं द्व्यक्षरं वा षडक्षरमथापि वा ।
अष्टाक्षरं वा मोक्षाय मन्त्रयोगी सदा जपेत् ॥ ५ ॥

* ஏகாக்ஷரமாயினும், துவியக்ஷரமாயினும், ஷடாக்ஷரமாயினும், அஷ்டாக்ஷரமாயினும் மோக்ஷத்தின்பொருட்டு மந்திரயோகி எப்போதும் ஜபிக்கக்கடவன். (௫)

यस्य चित्तं निजं ध्यायेत् मनसा मरुता सह ।
लीनं भवति नादेन लययोगी स एव हि ॥ ६ ॥

எவனது சித்தம் நிஜத்தினை வாயுவோடு மனதினால் தியானிக்கின்றதோ, நாதத்தோடு லயமாகின்றதோ, அவனே லய யோகி யாகின்றான். (௬)

भवेदष्टांगमार्गेण मुद्राकरणबन्धनैः ।
तथा केवलकुम्भेन हठयोगी वशानिलः ॥ ७ ॥

* அஷ்டாங்கமார்க்கத்தினாலும், முத்திராகரண கும்பகங்களாலும், அவ்வாறே கேவலகும்பகங்களினாலும், வசப்படுத்தப்பட்ட பிராணவாயுவினையுடையவன் ஹடயோகியாகின்றான். (௭)

---

* இவ்வேகாக்ஷராதி எந்திரங்கள் குருமுகமாகத் தெரியத்தக்கனவாம்

* அஷ்டாங்கம், முத்திரை, கும்பகம், கேவலகும்பகம் என்பவற்றின் இலக்கணம் இந்நூலிற் கூறப்பட்டுளதாயினும், அவற்றை விரிவாய் அறிய விரும்புவோர் ஹடயோகப்பிரதீபிகையிற் காண்க.

இராஜயோகம்.

त्रिषु लक्ष्येषु यो ब्रह्मसाक्षात्कारं भविष्यति ।
ज्ञानेवाथ मनोवृत्तिरहितो राजयोगवित् ॥ ८ ॥

மூன்று (அந்தர்மத்தியபாகியமென்னும்) லக்ஷியங்களில் எந்தச் சாக்ஷாத்காரமுண்டாகுமோ, அல்லது ஞானத்தில்மனோ விருத்தியின்றியவன் எவனோ, அவன் இராஜயோக முணர்ந்தவனாவன். (அ)

उत्तरोत्तरवैशिष्ट्याद्योगाश्चत्वार एव हि ।
तेष्वेक एव मुख्योऽसौ राजयोगोत्तमोत्तमः ॥ ९ ॥

மேல்மேல் சிறப்புடைமையால்யோகம் நான்கேயாம். அவற்றுள், இராஜயோகோத்த மோத்தமமான இஃதொன்றே முக்கியமாம். (௯)

सोपि त्रिधा भवेत् साङ्ख्यः तारकश्चामना इति ।
पञ्चविंशतितत्वानां ज्ञानं यत् साङ्ख्यमुच्यते ॥ १० ॥

அதுவும் (இராஜயோகமும்) சாங்கியம், தாரகம், அமனஸ்கம் என்று மூவகையினதாகின்றது. இருபத்தைந்து தத்துவங்களின் ஞானம் எதுவோ அது சாங்கிய மெனப்படும். (௧0)

बहिर्मुद्रापरिज्ञानात् योगस्तारकमुच्यते ।
अन्तर्मुद्रापरिज्ञानात् अमनस्क इतीरितः ॥ ११ ॥

வெளி முத்திரையின் பரிஞானத்தால் யோகம் தாரகமெனப்படும். உள் முத்திரையின் பரிஞானத்தினால் அமனஸ்க மெனப்படுகின்றது. (௧௧)

श्लाघ्यस्साङ्ख्यात् तारकोयं अमनस्कोपितारकात् ।
राजत्वात् सर्वयोगानां राजयोग इति स्मृतः ॥ १२ ॥

சாங்கியத்தினும் இத்தாரகமும், தாரகத்தினும் அமனஸ்கமும் சிலாக்கியமாம். எல்லா யோகங்களுக்கு இராஜாவாயிருத்தலால் இராஜயோகமென்று கருதப்படுகின்றது. (கஉ)

नोभेदश्शिवयोगस्य राजयोगस्य तत्वतः ।
शिवार्थिनां तथाप्येवमुक्तोबुद्धेः प्रवर्तये ॥ १३ ॥

சிவயோகத்திற்கும் இராஜயோகத்திற்கும் உண்மையாகப் பேதமில்லை. அவ்வாறாயினும் சிவவிருப்புடையோர்களது புத்தியின் பிரவிருத்தியின் பொருட்டு இவ்வாறு சொல்லப்பட்டது. ()

प्रतिपाद्यस्तयोः भेदः तथा शिवरतात्मनाम् ।
तस्मान्मनीषिभिःग्राह्यः शिवयोगस्तुकेवलः ॥ १४ ॥

அவ்வாறே சிவரதர்களுக்கு அவ்விரண்டன்பேதம் பிரதிபாதிக்கத் தக்கதாம். ஆதலால் அறிஞர்களால் கேவலம் சிவயோகம் கிரகிக்கத் தக்கதாம். (கச)

ज्ञानं शिवमयं भक्तिः शैवं ध्यानं शिवात्मकम् ।
शैवं व्रतं शिवार्चेति शिवयोगो हि पञ्चधा ॥ १५ ॥

சிவமயஞானம், சைவபக்தி, சிவவடிவதியானம், சைவவிரதம், சிவார்ச்சனமென்று சிவயோகம் ஐந்துவகையாகச் சொல்லப்படுகின்றது. (கரு)

शिवार्चनविहीनो यः पशुरेव न संशयः ।
स तु संसारचक्रेस्मिन् अजस्रं परिवर्तते ॥ १६ ॥

சிவார்ச்சன மின்றியவன் எவனோ அவன் பசுவே, சம்சயமில்லை. அவன் இந்தசம்சார சக்கிரத்தில் இடைவிடாது சுழல்கின்றான். (கசு)

सत्यं वदामि तत्तत्वं निर्णीतं पूर्वसूरिभिः ।
सर्वदेवमयं साक्षात् सर्वभूतमयस्तथा ॥ १७ ॥

सर्वज्ञानमयः सम्यक्सर्वतत्त्वोत्तरोत्तरः ।
सर्वतेजोमयः साक्षात् सर्वानन्दस्वरूपवान् ॥ १८ ॥

मायासमेतस्सकलो निष्कलः केवलः परः ।
अस्ति नास्तिद्वयातीतः वाङ्मनोगोचरात्मकः ॥ १९ ॥

अवर्णो वर्णसंयुक्तो निरूपी विश्वरूपभृत् ।
परमात्मा परंब्रह्म कश्चिद्देवोस्ति चिच्छिवः ॥ २० ॥

பூர்வஞானிகளால் நிர்ணயிக்கப்பட்ட அத்தத்துவத்தினை உண்மையாகச் சொல்லுகின்றேன் சர்வதேவமயமும், சாக்ஷாத் சர்வபூதமயமும், அவ்வாறே சர்வஞானமயமும், செவ்வையான சர்வதத்துவங்களின் உத்தரோத்தரமும், சர்வதேஜோமயமும், சாக்ஷாத் சர்வாநந்த சொரூபமுடையதும், மாயையோடு கூடியதும், சகலமும், நிஷ்கலமும், கேவலமும், பரமும், இருக்கிறது. இல்லையென்னு மிரண்டற்கு மப்பாற்பட்டதும், வாக்குமனதிற் கெட்டாத வடிவினதும், வர்ணமில்லாததும், வர்ணத்தோடுகூடியதும், ரூபமின்றியதும், விசுவரூபந்தாங்கியதும், பரமாத்மாவும், பரப்பிரஹ்மமும், சித்தும், சிவமுமான ஒரு தேவனுளன். (கஎ—உ0)

शिवात् उत्पद्यते शक्तिः शान्त्यतीता परात्मिका ।
अप्रतर्क्य गुणोपेता जृम्भते सा शिवाज्ञया ॥ २१ ॥

அந்தச் சிவத்தினின்றும் சாந்தியதீதமும் பரவடிவினதுமான சக்தியுண்டாகின்றது. அது சிவாஞ்ஞையினால் (இன்னதென்று) நிரூபிக்கப்படாத குணத்தோடுகூடியதாய் விரிகின்றது. (உக)

सा शक्तिः पञ्चधा भिन्ना भवति ब्रह्मरूपिणी ।
पञ्चभूतात्मिका नित्या तस्या आसीदिदं जगत् ॥ २२ ॥

அந்தப்பிரஹ்மவடிவசக்தி வேறுபட்டதாய் ஐந்துவகையின தாகின்றது. நித்தியமாகிய அதுபஞ்சபூதவடிவினதாம். இந்த ஜகத்து அதனுடையதாயிருந்தது. (உஉ)

आदौ व्योम्निस्थितो भाति साक्षाद्देवस्सदाशिवः ।
सदाशिवादीश्वरोऽपि सम्भूतः पवनेस्थितः ॥ २३ ॥

ஆதியில் சாக்ஷாத் தேவனுகிய சதாசிவன் ஆகாயத்தில் நிலைத்தவராய் விளங்குகின்றூர். ஈசுவரனும் சதாசிவத்தினின்று முண்டானவராய் வாயுவில் நிற்பவராகின்றூர். (உந)

ईश्वरादभवत् रुद्रो वन्हौ स्थित्वा प्रतापवान् ।
रुद्राद्विष्णुर्महातेजावारितत्वे व्यवस्थितः ॥ २४ ॥

ருத்திரன் ஈசுவரனினின்று முண்டாய் வந்நியில் நிலைத்துப் பிரதாபமுடையவ ராகின்றூர். ருத்திரனினின்று முண்டாய் மகாதேஜசுடைய விஷ்ணு ஜலதத்துவத்தில் நிலைத்தவராகின் றூர். (உச)

विष्णुतत्वोदितो ब्रह्मा पृथ्वीतत्वे व्यवस्थितः ।
एवं पराशक्तिजाता विश्वपाः पञ्चमूर्तयः ॥ २५ ॥

விஷ்ணுதத்துவத்தினின்றுண்டாகி பிரஹ்மா பிருதிவி தத் துவத்தில் நிலைத்தவராகின்றூர். இவ்வாறு பராசத்தியினின்றுண் டானவர்களாய் விசுவத்தை ரக்ஷிப்பவர் பஞ்சமூர்த்திகளாவர்.()

निवृत्तिश्च प्रतिष्ठाच विद्या शान्तिः तथैव च ।
शान्त्यतीतकला ह्येताः स्थिता ब्रह्मादिमूर्तिषु ॥ २६ ॥

நிவிருத்தியும், பிரதிஷ்டையும், வித்தையும், சாந்தியும், அவ்வாறே சாந்தியதீத கலையுமென்னும் இவைபிரஹ்மா முதலிய மூர்த்திகளில் நிலைத்துள்ளன. (உசா)

तया शिवाज्ञया ह्येता वर्तन्ते सुमहोज्वलाः ।
ब्रह्मणो देवता दैत्या मुनयो मानवा स्थिताः ॥ २७ ॥

அச்சிவாஞ்ஞையினால் இவை நல்ல மகா உஜ்வல (பிரகாச) முடையனவாயிருக்கின்றன. பிரஹ்மாவிலிருந்தும் தேவதை, தைத்தியர்கள், முனிகள் மானவர்கள் நிலைத்துளர். (உஎ)

स्वेदजा अण्डजास्सर्वे प्राणिनश्च जरायुजाः ।
तृणागुल्मलतावृक्षाद्यनेकोद्भिज्जकोटयः ॥ २८ ॥

गिरयः सरितश्चान्ये समुद्रांश्च सरांसिच ।
सम्भवन्ति क्रमेणैव तस्माच्छिवमयं जगत् ॥ २९ ॥

சுவேதஜங்களும் அண்டஜங்களும் ஜராயுஜங்களுமாகிய எல்லாப் பிராணிகளும், புற்பூண்டு கொடி விருக்ஷாதி அநேக உற்பிஜ்ஜகோடிகளும், மலைகளும், ஆறுகளும், மற்றை சமுத்திரங்களும், தடாகங்களும் கிரமமாகவேயுண்டாகின்றன. ஆதலால் சிவமயமாம் ஜகத்து. (உஅ—உகூ)

यस्तं शिवं केवलचित्स्वरूपं सूर्येन्दुवैश्वानर मण्डलस्थम् ।
गुरुप्रसादात् त्रिमलं क्षयित्वा ध्यात्वा यजन् मोक्षसुखं प्रयाति॥३०॥

எவன் சூரிய சந்திராக்கினி மண்டலத்திருப்பதும் கேவல சித் ஸ்வரூபமுமாம் அச்சிவத்தைக் குருப்பிரசாதத்தினால் மும்மலங்களையும் ஒழித்துத் தியானித்துயஜிக்கின்றானோ அவன் மோக்ஷசுகத்தினை அடைகின்றான். (௩0)

शिवज्ञानं द्विधा ज्ञेयं सगुणं निर्गुणन्तथा ।
आदौ सगुणमाश्रित्य पश्चान्निर्गुणमाचरेत् ॥ ३१ ॥

சிவஞானம் சகுணம் நிர்க்குணமென்று இருவகையாய் அறியத்தக்கதாம். முதலில் சகுணத்தை யாசிரயித்துப் பின் நிர்க்குணத்தை ஆசிரயிக்கவேண்டும். (௩க)

सगुणं बहुधाप्रोक्तं बाह्याभ्यन्तरगोचरम् ।
इन्द्रियादिभिरग्राह्यं निर्गुणं त्वं तदीक्षस्व ॥ ३२ ॥

சகுணம் பாகியாப்பியந்தர கோசரமாய் வெகு விதமாகச் சொல்லப்படும். இந்திரியாதிகளால் கிரகிக்கத்தகாதது நிர்க்குணம். அதனை நீ அறிக. (௩௨)

एवं तत्त्वपरिज्ञानं गुरुष्वेवव्यवस्थितम् ।
अत एव मुमुक्षूणां पूजनीयश्च सद्गुरुः ॥ ३३ ॥

இவ்வாறு தத்துவபரிஞானம் குரவரிடத்திலேயே வியவஸ்தையுடையதாயிருக்கின்றது. இதனாற்றான் சற்குரு முமுக்ஷுக்களுக்குப் பூஜிக்கத்தக்கவராவர். (௩௩)

सदायुरारोग्यमपारमूर्तिं विद्यां यशस्स्वर्गसुखञ्चमोक्षम् ।
फलानि सर्वाणि नरस्समाप्तुं कथं समर्थो गुरुणा विहीनः ॥ ३४ ॥

நல்லஆயுள், ஆரோக்கியம், அபாரமூர்த்தி, வித்தை, கீர்த்தி ஸ்வர்க்கசுகம், மோக்ஷமென்னும் பயன்கள் எல்லாவற்றையும் நரன் குருவின்றி முடித்தற்கு எவ்வாறு சமர்த்தனாவான்? (௩௪)

उक्तलक्षणसंपन्नमाचार्यं सर्ववेदिनम् ।
कर्मणा मनसा वाचा शिववत् पूजयेद्गुरुम् ॥ ३५ ॥

முற்கூறிய லக்ஷணத்தோடு கூடியவரும், எல்லாமுணர்ந்தவரும், ஆசாரியருமாகிய குருவை சிவத்தைப்போல் கர்ம (காய)த்தினாலும் வாக்கினாலும் மனதினாலும் பூஜிக்கவேண்டும். (௩௫)

तस्माद्गुरुमुखेनैव दीक्षितो यश्शिवाश्रितः ।
चतुर्वर्गफलावाप्तिस्सुखं तस्यकरे स्थिता ॥ ३६ ॥

ஆதலால் குருமுகத்தினாலேயே தீக்ஷிதனாய்ச் சிவனை யாசிரயித்தவனெவனோ அவனுக்கு (தர்மார்த்த காமமோக்ஷ மென்னும்) நால்வர்க்கபயனின் அடைவாகிய சுகம் கையிலிருப்பதாம்.

त्रिकालं वा द्विकालं वा एककालमथापि वा ।
भक्त्या गुरूक्तमार्गेण पूजयेच्चिन्मयं शिवम् ॥ ३७ ॥

மூன்று காலமாவது இரண்டு காலமாவது ஒரு காலமாவது குருவுபதேசித்த வழியோடு சின்மயமான சிவத்தைப் பக்தியோடு பூசிக்கவேண்டும். (௩௭)

अन्तर्यागो बहिर्यागो द्विविधं तच्छिवार्चनम् ।
मुख्या चाभ्यन्तरे पूजा सा च बाह्यार्चनोदिता ॥ ३८ ॥

அந்தர்யாகம் (உட்பூஜை) பகிர்யாகம் (புறப்பூஜை) என்று அச்சிவார்ச்சனம் இருவகையாம். சொல்லப்பட்ட பாகியார்ச்சனையாகிய அதுவும் உள்ளில் முக்கியபூஜையாம். (௩௮)

आत्मस्थमत्यन्तरुचिप्रशान्तमश्रान्तमीशं हि यजन्ति सन्तः ।
तं बाह्यनानाप्रतिमासु बाह्याः त्रिधाभिरेवाल्पधियो यजन्ति ॥ ३९ ॥

ஆத்மாவிலிருப்பதும், அத்தியந்தருசியாய் மிகச் சாந்தமானதும், களைப்பின்றியதுமான ஈசனைச் சத்துக்கள் யஜிக்கின்றனர். அதனைப் புறமுகத்தினராகிய அற்பபுத்திகள் வெளியில் (தாருதாம்பிரம்மிருத்திகை சிலை முதலிய) நாநாப்பிரதிமைகளில் மூன்றுவிதங்களாலேயே யஜிக்கின்றனர். (௩௯)

हृत्पद्मं शिवधर्मकुन्दसहितं सुज्ञाननालं तथा
नित्यैश्वर्यदलाष्टकं शशिनिभं वैराग्यसत्कर्णिकम् ।
श्रीरुद्रेश्वरकेसराञ्चितमिदं सञ्चिन्त्य तन्मध्यमे
सूर्येन्दुज्वलद्वह्निमण्डलगतं ध्यायेच्छिवं चिन्मयम् ॥ ४० ॥

சிவதர்மமாகிய குந்தத்தோடு கூடியதும் நல்ஞானமாகிய நாளமுடையதும் அப்படியே நித்தியைசுவரிய இதழ்களெட்டுடையதும், சந்திரனையொத்த வைராக்கியமாகிய நல்ல கர்ணிகையுடையதும் ஸ்ரீ ருத்திரேசுவர கேசரத்திலலங்கரிக்கப்பட்

டதுமான இவ்விருதயகமலத்தினைச் செவ்வையாய்ச் சிந்தித்து, அதன் மத்தியில் சூரிய சந்திர வக்கினிமண்டலத்துள்ள சின்மய சிவத்தைத் தியானிக்கவேண்டும். (௪௦)

प्रसन्नवदनं शान्तं ध्यष्टवर्षीयमुज्वलम् ।
अनेककोटिकन्दर्पलावण्यसमविग्रहम् ॥ ४१ ॥

चतुर्भुजं मृगीटङ्कवरदाभयधारिणम् ।
चन्द्ररेखाशिरोभूषं शरच्चन्द्रनिभद्युतिम् ॥ ४२ ॥

दिव्याम्बरधरं देवं दिव्यगन्धानुलेपनम् ।
दिव्याभरणशोभाढ्यं दिव्यपुष्पैरलंकृतम् ॥ ४३ ॥

त्रिणेत्रं त्रिगुणाधारं त्रिमलक्षयकारणम् ।
सर्वमङ्गलया देव्या निजवामाङ्कशोभितम् ॥ ४४ ॥

भास्वत्कल्पतरोर्मूले फलपुष्पसमन्विते ।
वेदिकायांसमासीनं नवरत्नमयासनम् ॥ ४५ ॥

अद्वैतमच्युतं विष्णुं नित्यं निर्वाणगोचरम् ।
अचिन्त्यमजमव्यक्तमादिमध्यान्तवर्जितम् ॥ ४६ ॥

परं शिवं हृदि ध्यात्वा निश्चयीभूतमानसः ।
यजेदाभ्यन्तरद्रव्यैरवधानेन तद्यथा ॥ ४७ ॥

பிரசன்னவதனமும், சாந்தமும், ஈரெட்டு (பதினாறு) வருஷமுள்ள பிரகாசவடிவினதும், அநேக கோடி மன்மதர்களின் அழகையொத்த விக்கிரகமுள்ளதும், நாற்புயத்தினதும், மான் டங்கம் (உளி) வரதம் அபயமென்பவற்றைத் தரித்ததும், சந்திர ரேகையைச் சிரசிலணிந்ததும், சாற்கால சந்திரனைப்போன்ற பிரகாசமுடையதும், திவ்வியாம்பரம் தரித்ததும், தேவனும்,

திவ்யகந்தம் பூசியதும், திவ்யாபரணங்களா லலங்கரிக்கப்பட்டதும், திவ்யபுஷ்பங்களா லலங்கரிக்கப்பட்டதும், மூன்று நேத்திரமுடையதும், முக்குணாதாரமும், மும்மலக்ஷய காரணமும், சர்வமங்கலவடிவ தேவியினால் தனது இடது மடி சோபிக்கப்பெற்றதும், பல புஷ்பங்களோடு கூடியதாய்ப் பிரகாசிக்கும் கற்பகவிருக்ஷத்தினடியில் மேடையில் வீற்றிருப்பதும், நவரத்தினமய ஆசனமுடையதும், அத்வைதமும், அச்சுதமும், விஷ்ணுவும், நித்தியமும், நிர்வாணகோசரமும், அசிந்தியமும் (சிந்திக்கத் தகாதது), அஜமும் (பிறப்பில்லாததும்), அவ்வியக்தமும் (வெளிப்படாததும்), ஆதிமத்தியாந்தமில்லாததுமான, பரசிவத்தை இருதயத்தில் தியானித்து, நிச்சயவடிவமனதுடையவனாய் உள்திரவியங்களால் அவதானத்தோடு(கவனமாக) யஜிக்கக்கடவன்.

(சசு—சள)

शमाम्ब्वभिनिषेचनं सकलपूर्णभावाम्बरं
त्रिशक्तिगुणसंयुतं विहितयज्ञसूत्रं तथा ।
स्वसंविदनुलेपनं समधिकानुकम्पाक्षतान्
शिवाय विनिवेदयेत् प्रकटभक्तिपुष्पाणि च ॥ ४८ ॥

அ·தாமாறு:—சமமாகிய ஜலாபிஷேகம், சகலபூர்ணபாவமாகிய வஸ்திரம், முச்சத்திகுணத்தோடுகூடிய விகிதமான யஞ்ஞசூத்திரம் (பூணூல்) அவ்வாறே ஸ்வஸம்வித் (தன்ஞானம்) ஆகிய சந்தனதிப்பூச்சு, செவ்வையான மிகுந்த இரக்கமாகிய அக்ஷதைகளும், வெளிப்பட்டபக்தியாகிய புஷ்பங்களும், சிவத்திற்கு நிவேதிக்கவேண்டும். (சஅ)

धूपमान्तरचतुष्टयेन च दीपमिन्द्रियगुणोत्तरेण तु ।
कल्पयेच्च सुखदुःखवर्जितं जीवरूपमुपहारमान्तरे ॥ ४९ ॥

உள் (அந்தக்கரண) நான்கினால் தூபமும், இந்திரிய குணோத்தரத்தினால் தீபமும், சுக துக்கமின்றிய ஜீவவடிவனைவேத்தியமும் உள்ளே கற்பிக்கவேண்டும். (சகூ)

रजस्तमस्सत्वगुणत्रयञ्च ताम्बूलकं प्राण नमस्कृतिञ्च ।
इत्येवमाभ्यन्तरमुख्यपूजाद्रव्याणि संपादयशङ्कराय ॥ ५० ॥

இரஜஸ் தமஸ் சத்துவகுண மூன்றும் தாம்பூலமும், பிராணன் நமஸ்காரமுமாம். இவ்வாறு உள்முக்கியபூஜாத்திரவியங்களைச் சங்கரனுக்குச் சம்பாதிப்பாயாக. (ரு௦)

अथवा वाहनाद्यैस्तमुपचारैश्च राजवत् ।
पूजयस्व शिवं भक्त्या परमात्मानमान्तरे ॥ ५१ ॥

அல்லது வாகனமுதலிய அவ்வுபசாரங்களால் இராஜனைப் போல பரமாத்மாவாகிய சிவத்தை உள்ளே பக்தியோடு பூஜிப்பாயாக. (ருக)

अत एव सदा पूजामिमामाभ्यन्तरां कुरु ।
समस्तपापदलनीं सर्वदुःखविनाशिनीं ॥ ५२ ॥

शिवभक्तिप्रदां साक्षात्मनोनैर्मल्यकारिणीम् ।
सर्वैश्वर्यकरीं सम्यग्योगज्ञानप्रदायिनीम् ॥ ५३ ॥

ஆதலானே சகல பாபங்களை யொழிப்பதும், சர்வ துக்கங்களையும் கெடுப்பதும், சிவபக்தியைத் தருவதும், நேரே மனோநிர்மலத்தன்மைக்குக் காரணமும், சர்வைசுவரியத்தைச் செய்வதும், நல்ல யோகஞானத்தைத் தருவதுமான இந்த ஆப்பியந்தர (உள்) பூஜையினை எப்பொழுதும் செய்வாயாக. (ருஉ-ருங)

। इति श्रीसदाशिवयोगीन्द्रविरचितायां शिवयोगदीपिकायां प्रथमः पटलः ।

இவ்வாறு ஸ்ரீ சதாசிவயோகீந்திரராற் செய்யப்பட்ட

சிவயோகப்பிரதீபிகையில் முதற்படலம்

முடிந்தது.

। अथ द्वितीयः पटलः ।

## இரண்டாம் படலம்.

अथ ते सम्प्रवक्ष्यामि शिवपूजाविधिं बुधैः ।
पुनः प्रकारमाख्यातं योगमार्गैकगोचरम् ॥ १ ॥

இனி அறிஞர்களால் யோகமார்க்க மொன்றற்கே விஷயமாகும் வகையாகச் சொல்லப்பட்ட சிவபூஜாவிதியை மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன். (க)

योगात् सञ्जायते ज्ञानं ज्ञानाद्योगः प्रवर्तते ।
द्वयोस्संसिद्धये भूमौ शरीरं रक्षयेत् बुधः ॥ २ ॥

யோகத்தினால் ஞான முண்டாகின்றது. ஞானத்தினால் யோகம் பிரவர்த்திக்கின்றது. இரண்டினது சித்தியின் பொருட்டுப் பூமியில் சரீரத்தை அறிஞன் இரக்ஷிக்கவேண்டும். (உ)

शरीरं कफनाशेन सुस्थिरं याति निश्चितम् ।
तत् कथं हटयोगेन विनश्यति शरीरिणाम् ॥ ३ ॥

சரீரம் கபநாசத்தினால் நல்ல ஸ்திரத்தை யடைகின்றது நிச்சயம். அது எவ்வாறும்? சரீரிகளுக்கு ஹடயோகத்தினால் நசிக்கும்? (ந)

शिवयोगस्साधकानां साध्यस्तत्साधने हटः ।
यमादिभिरथाष्टाङ्गैर्देवपूजां समाचरेत् ॥ ४ ॥

சாதகர்களுக்குச் சிவயோகம் சாத்தியமாம். அதனைச்சாதித்தலில் இயமாதி அஷ்டாங்கங்களோடு ஹடம் உபயோகமாம். இயமாதி அஷ்டாங்கங்களால் தேவபூஜையைச் செவ்வையாய் ஆசரிக்கவேண்டும். (ச)

பாகியசதுரங்கம்.

यमनियमगुणैश्च स्वात्मशुद्धिं विधाय
स्ववशविविधपीठैरेव भूत्वा स्थितात्मा ।
असुनियमजलेन स्नापयेद्दिव्यलिङ्गम्
प्रकटितचतुरङ्गं बाह्यमेतद्विधानम् ॥ ५ ॥

இயமநியமகுணங்களால் சுவாத்ம சுத்தியை விதித்து, சுவவசமான பல்வகைப் பீடங்களாலேயே நிலைத்த ஆத்மாவா(மனதுடையவனா)ய், பிராணநியம(பிராணாயாம) ஜலத்தினால் திவ்விய லிங்கத்தினை ஸ்நானஞ் செய்விக்கவேண்டும். இவ்விதானம் வெளிப்படையான * பாகிய சதுரங்கமாம். (ரு)

ஆப்பியந்தர சதுரங்கம்.

शम्भोरपीन्द्रियनिवर्तनमेव गन्धो
ध्यानं प्रसूननिचयो दृढधारणा सा ।
धूपस्समाधिरिति शुद्धमहोपहार-
माभ्यन्तराख्यचतुरंगविधानमेतत् ॥ ६ ॥

இந்திரிய நிக்கிரகமே சிவத்துக்குக் கந்தமாம். தியானம் புஷ்பக்குவியலாம். திடதாரணையாகிய அது தூபமாம். சமாதியென்பது சுத்த நைவேத்தியமாம். இஃது ஆப்பியந்தர மென்னும் † சதுரங்க விதானமாம். (சு)

एवमष्टांगयोगेन सदान्तःपद्मसद्मनि ।
पूजयेत् परमं देवं किं बाह्यैः देवपूजनैः ॥ ७ ॥

இவ்வாறு அஷ்டாங்க யோகத்தினால் எப்போதும் இருதய கமலமாகிய இடத்தில் மேலான தேவனைப் பூஜிக்கவேண்டும். வெளித்தேவபூஜைகளால் என்ன பயன்? (எ)

---

* இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன வெளி நான்கங்கம்.

† பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்பன உள்நான்கங்கம்.

स्वात्मन्येव सदाष्टांगैः पूजयेच्छिवमव्ययम् ।
शैवस्स एव विद्वांश्च स च योगविदां वरः ॥ ८ ॥

தனதாத்மாவினிடத்திலேயே அவ்வியயமான சிவத்தினை எப்போதும் அஷ்டாங்கங்களால் பூஜிக்க வேண்டும். அவனே சைவன்; வித்வான். அவனே யோகமுணர்ந்தவர்களில் சிரேஷ்டன். (அ)

க-பாகிய சதுரங்கவிதானம்.

(க) இயமம்.

सुब्रह्मचर्यं नियताशनञ्च धृतिर्दयासूनृतमार्जवञ्च ।
शौचं क्षमास्तेयपदैरहिंसा यमादिकास्ते मुनिभिः प्रणीताः ॥ ९ ॥

நல்ல பிரஹ்மசரியமும், நியதமான உணவும், தைரியமும், தயையும், சத்தியமும், கபடமின்மையும், சௌசமும், க்ஷமையும், திருடாமையும், அஹிம்ஸையுமாகிய அவை * இயமாதிகளாக முனிகளால் சொல்லப்பட்டன. (கூ)

(உ) நியமம்.

सन्तोषमास्तिक्यगुणो मतिश्च तपोव्रतं शङ्करपूजनं जपः ।
हृद्योगशास्त्राश्रयं लज्जा पात्रे प्रदानमेते नियमादश स्मृताः ॥१०॥

சந்தோஷம், ஆஸ்திக்கியம், மதி, தவம், விரதம், சங்கர பூஜனம், ஜபம், உள்ளத்து யோகசாஸ்திரத்தை ஆசிரயித்தல் ஸ்நானம், பாத்திரத்துத் தானம் என்னும் இப்பத்தும் * நியமங்கள் என்று கருதப்படுகின்றன. (கய)

---

* இயமம் நியமம் பத்தின் இலக்கணம் ஹடயோகப்பிரதீபிகையின் குறிப்பில் விரிவாயெழுதப்பட்டிருத்தல் காண்க.

(ஆத்மசுத்தி.)

यमैश्च नियमैस्सम्यक् एवं विंशतिसङ्ख्यया ।
स्थिरश्च नियतो भूत्वा स्वात्मशुद्धिं समाचरेत् ॥ ११ ॥

இயமங்களும் நியமங்களுமாகிய இத்தன்மைய (பிரஹ்மசரியாதி) இருபதெண்ணால் ஸ்திரமுடையவனும் நியமமுடையவனுமாய், தனது ஆத்மசுத்தியை ஆசரிக்கக்கடவன். (கக)

(ந) ஆசனம். (பீடம்.)

सिद्धांबुजं स्वस्तिकमुक्तवीरभद्राहिभुक्सिंहगवामुखानि ।
सुखासनञ्चैव समङ्कितानि ततो दशैतानि वरासनानि ॥ १२ ॥

சித்தம், பதுமம், ஸ்வஸ்திகம், முக்தம், வீரம், பத்திரம், மயூரம், சிங்கம், கோமுகமென்னும் ஆசனங்களும், சுகாசனமும் செவ்வையாய்ப் பொருத்தப்படுவனவாம். ஆதலால் இப்பத்தும் மேலான ஆசனங்களாம். (கஉ)

ग्रहिणामम्बुजं सिद्धं ग्रहस्थात्मकवर्त्मनाम् ।
सुखासनञ्च सर्वेषामित्येतात्त्रिविधं परम् ॥ १३ ॥

கிருகஸ்தகர்களுக்குப் பதுமமும், கிருகஸ்தரைச் சார்ந்து நடப்பவர் (துறவி)களுக்குச் சித்தமும், எல்லோருக்கும் சுகாசனமுமாமென்னும் இம்மூவகையும் மேலானதாம். (கங)

यानि कानि प्रशस्तानि ह्यासनानि समानि च ।
तेष्वभीष्टासनासीनो विविक्तस्थानमाश्रयेत् ॥ १४ ॥

சிலாகிக்கப்படுவனவும் சமமுமான ஆசனங்கள் எவையெவையோ, அவற்றுள் இஷ்டமான ஆசனத்திருப்பவனாய்த் தனியிடத்தினை ஆசிரயிக்கக்கடவன். (கச)

மடலக்ஷணம்.

तत्र रम्यं मठं कुर्यात् सूक्ष्मद्वारञ्च निर्व्रणम् ।
प्राकारवेष्टितं शुद्धं बहिश्शालासमन्वितम् ॥ १५ ॥

सुगन्धकुसुमाकीर्णं वितानपरिशोभितम् ।
मृदूपधानशय्याद्यैरासनाद्यैस्समाकुलम् ॥ १६ ॥

सुधूपवासितं नित्यं गोमयेन सुलेपितम् ।
समित्पुष्पफलोपेतं कन्दमूलफलान्वितम् ॥ १७ ॥

समग्रभस्मरुद्राक्षकुशाजिनविभूषितम् ।
शुद्धान्नपानसम्पन्नं सर्वौषधसमाश्रितम् ॥ १८ ॥

सदा मनोहरास्पदं मठे वासमुपेत्य च ।
सदाशिवंप्रपूजयेत्तृहृदि स्थिरसमाहितः ॥ १९ ॥

அங்கு இரம்மியமான சிறுவாயிலுள்ளதும், பொந்து முதலியவில்லாததும், மதில்சூழ்ந்ததும், சுத்தமும், வெளிக்கூடத்தோடு கூடியதும், நல்ல வாசனைப்புஷ்பங்கள் நிறைந்ததும், மேற்கட்டியினுல் அலங்கரிக்கப்பட்டதும், மிருதுவான தலையணை படுக்கை முதலியவற்ருலும் ஆசனங்களாலும் செவ்வையாய்ப் பொருந்தியதும், நற்புகைகளால் மணமேற்றப்பட்டதும், நித்தியம் கோமயத்தினுல் நன்ருய் மெழுகப்பட்டதும், சமித்துப்புஷ்பம் பல முதலியவற்ருேடு கூடியதும், கந்த மூலபலங்களோடுகூடியதும், முழுவதும் பஸ்மம் ருத்திராக்ஷம் குசம் (புலி முதலியவற்றின்) தோல் என்பவற்ருல் விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டதும், சுத்தமான அந்நபானங்களோடு கூடியதும், சர்வ ஔஷதங்களும் பொருந்தியுள்ளதும், எப்போதும் மனதைக் கவரும்படி யானதாயுமுள்ள மடத்தினைச் செய்யவேண்டும். அம்மடத்தில் வாசத்தையடைந்து ஸ்திரசமாதானமுடையவனுய் இருதயத்தில் சதாசிவனைப் பூஜிக்கவேண்டும். (கரு-கக)

(ச) பிராணயாமம் (அபிஷேகம்.)

तद्यथा शृणु हेविद्वन्नादौ केवलकुम्भके ।
प्राणायामजलेनैव स्नापयेच्चिन्मयं शिवम् ॥ २० ॥

அறிஞனே! அஃதாமாறு கேள்:—முதலில் கேவலகும்பகத்தில் பிராணயாம ஜலத்தினுல் கேவல சின்மயமான சிவத்தினை ஸ்நானம் செய்விக்கவேண்டும். (உ0)

பிராணயாமபேதம்.

प्राणायामस्तथा प्रोक्तः प्राकृतो वैकृतस्तथा ।
ताभ्यांविनाजृम्भतेऽसौकेवलः कुम्भकः स्वयम् ॥ २१ ॥

பிராணயாமம் பிராகிருதம் வைகிருதமென்று சொல்லப்படுகின்றது. அவ்விரண்டுமின்றி இக்கேவல கும்பகம் தானே விரிகின்றது. (உக)

பிராகிருதப் பிராணயாமம்.

निश्वासोच्छ्वासरूपेण रेचपूरस्वभावतः ।
प्राणानिले वर्तमाने प्राकृतस्स उदीरितः ॥ २२ ॥

நிசுவாச உசுவாச வடிவத்தால் ரேச பூர சுபாவத்தினுல் பிராணவாயு நிகழுங்கால் அது பிராகிருதமென்று சொல்லப்படுகின்றது. (உஉ)

வைகிருதப் பிராணயாமம்.

आगमोक्तविधानेन रेचपूरककुम्भकैः ।
इति प्राणनिरोधश्च वैकृतस्स उदीरितः ॥ २३ ॥

சாஸ்திரத்திற் கூறிய விதிப்படி ரேசக பூரக கும்பகங்களால் இவ்வாறு பிராண நிரோதஞ்செய்தல் எதுவோ அது வைகிருதமென்று சொல்லப்படும். (உ௩)

### கேவல கும்பகம்.

प्राकृतं वैकृतंचेति द्वयमेतन्महात्मनः ।
क्षणात् संस्तम्भयेद्यस्य स हिकेवलकुम्भकः ॥ २४ ॥

*பிராகிருதம் வைகிருதமென்னும் இவ்விரண்டும் எந்த மகாத்மாவுக்கு க்ஷணத்தில் செவ்வையாய் நிற்கின்றதோ, அதுவே கேவலகும்பகமாம்.* (உச)

### நால்வகை யோகம்.

प्राकृतो मन्त्रयोगस्स्यात् वैकृतो लय एव हि ।
हठः केवलकुम्भाख्यो राजयोगोऽमनस्मृतः ॥ २५ ॥

*பிராகிருதம் மந்திரயோகமாம். வைகிருதம் லயமேயாம். கேவலகும்பக மென்பது ஹடமாம். அமநஸ்கம் இராஜயோகமாம்.* (உரு)

प्रथमस्त्वजपायोगो नादे वायोर्लयस्तथा ।
सुस्थिरस्सततं पश्चाद्वृत्तिशून्यश्चतुर्थकम् ॥ २६ ॥

*முதலாவது அஜபாயோகம், இரண்டாவது நாதத்தில் வாயுவின் லயம், மூன்றாவது வாயு இடைவிடாது அசைவற்றிருத்தல், பின்னர் நான்காவது விருத்திசூநியம்.* (உசா)

प्राणवायुनिरोधेन लभते च चतुष्टयम् ।
तस्मादभ्यासशूरत्वं प्राणायामपरो भव ॥ २७ ॥

*பிராணவாயுவின் நிரோதத்தினால் நான்கையும் அடைகின்றான். ஆதலால் அப்பியாசசூரனே? நீ பிராணாயாமபரனாகக் கடவாய்.* (உஎ)

हकारान्तमिदं बीजं बहिर्याति सबिन्दुकम् ।
सविसर्गं सकारान्तं तद्बीजं प्रविशत्यधः ॥ २८ ॥

* விந்துவோடுகூடிய ஹகாராந்தமான இப்பீஜம் வெளியிற் செல்லுகின்றது. விஸர்க்கத்தோடு கூடிய ஸகாராந்தமான அப்பீஜம் கீழிருந்தும் (உள்ளே) பிரவேசிக்கிறது. (உஅ)

प्राणानिलश्च सर्वेषां प्रवर्तकनिवर्तकः ।
एवं जीवजपो नाम गायत्रीजपमन्वहम् ॥ २९ ॥

एकविंशतिसहस्रसङ्ख्यया षट्शताधिकमहर्निशं नरः ।
श्रीगुरुक्तविधिनारुणोदये संस्मरन् वहति तज्जपःफलम् ॥ ३० ॥

பிராணவாயு எல்லோருக்கும் பிரவர்த்திப்பதும் நிவர்த்திப்பதுமாம். இவ்வாறு ஜீவஜபமென்னும் காயத்திரி ஜபத்தினைத் தினந்தோறும் இருபத்தோராயிரத்தறுநூறு இரவும் பகலும் நரன் ஸ்ரீ குருவுபதேசித்த வழிப்படி அருணோதயத்தில் செவ்வையாய் ஸ்மரித்து அஜ்ஜபபலத்தை அடைகின்றான். (உகூ-௩0)

अजपा नाम सङ्कल्प्य नरः पापैः प्रमुच्यते ।
शिवयोगमवाप्नोति शीघ्रमेव न संशयः ॥ ३१ ॥

அஜபையென்பதைச் சங்கற்பித்து நரன் பாபங்களினின்றும் விடுபடுகின்றான். சிவயோகத்தைச் சீக்கிரமாகவே அடைகின் கின்றான் ; சம்சயமில்லை. (௩க)

अजपानामगायत्रीमन्त्रं वर्णद्वयं यदा ।
त्रिवेणीसंगमे लीनं स शब्दः प्रणवस्स्मृतः ॥ ३२ ॥

அஜபையென்னும் காயத்திரி மந்திரமாகிய வர்ணமிரண்டும் எப்போது † திரிவேணி சங்கமத்தில் ஒடுங்குகின்றதோ அப்போதுண்டாம் அச்சப்தம் பிரணவமென்று கருதப்படுகின்றது. (௩உ)

---

* ஹாம் என்று வெளியிற்செல்லுகின்றது, ஸ: என்று உள்ளே பிரவேசிக்கின்றது. இதனை ஹடயோகப்பிரதீபிகையின் டிப்பணியில் தெளிவாய்க் காணலாம்.

† இதனை இப்படலத்தின் ௩௫-வது சுலோகத்தில் காண்க.

सोहं कृत्वात्ममन्त्रं स्वपदपरतरं व्यक्तवर्णद्वयन्तद्व्यलुम्पेत् ।
व्यञ्जने द्वौ पुनरपि रचयेद्दिव्यमोङ्कारमन्त्रम् ॥ ३३ ॥

ஆத்ம(ஹம்ஸ) மந்திரமாகிய அதனை சுவபதபரதரமான வெளிப்படையான வர்ணமிரண்டாகிய ஸோஹம் என்று செய்து அதிலுள்ள (ஸ் ஹ் என்னும்) இரண்டு மெய்யெழுத்துக்களையும் நீக்கிவிடுக. மறுபடியும் திவ்வியமான ஓங்கார மந்திரத்தினை ஆக்குக (கூங)

कृत्वानुस्वारयुक्तं सकलमनुपरं ब्रह्मनाढीं नयेद्यः ।
पूर्णानन्दस्सकुण्डल्यनुभवविकलः कर्मणे सूर्तिमेति । ३४ ॥

எல்லாவற்றையும் அநுஸ்வாரத்தோடுகூடியதாய்க் கிரமமாகப் பிரஹ்மநாடியில் எவன்கொண்டுபோகின்றானோ, அவன் பூர்ணாநந்தனாய்க் குண்டலியநுபவ விகலனாய்க் கர்மத்தின் நாசத்தைப் பெறுகின்றான். (கூச)

मैलास्मृतेन्दुरिति सूर्यसुतेति योगात्
सा पिंगलेन इति विष्णुपदीति तासाम् ।
सामध्यमाग्निरितियोग इयन्त्रिवेणी ।
योगःफलं तदिदमेव हि यत्त्रिकूटम् ॥ ३५ ॥

அவ்விடை நாடி யோகத்தினால் சந்திரனென்றும், யமுனையென்றும் கருதப்படுகின்றது. அப்பிங்கலைநாடி சூரியனென்றும், கங்கையென்றும் கருதப்படுகின்றது. அவற்றுள் மத்தியமையாகிய சுழுமுனைநாடி அக்கினியென்றும் சரஸ்வதியென்றும் கருதப்படுகின்றது. யோகத்தில் இது * திரிவேணியாம் திரிகூடம் எதுவோ அவ்விதுவே யோகபலமாம். (கூரு)

---

* கங்கையமுனை சரஸ்வதி யென்னும் மூன்று நதிகளும் கூடும் இடத்தினைத் திரிவேணி என்பர் அவ்வாறே யோகசாஸ்திரத்தில் பிங்கலை இடைசுழுமுனையென்னும் மூன்றுநாடிகளும் கூடுமிடத்தினைத்திரிவேணியென்பர்.

तस्मात्रिकूटनामा च त्रिवेणीसङ्गमस्थलम् ।
शृङ्गाटकचतुःपीठनामान्येकस्थलस्य हि ॥ ३६ ॥

ஆதலால் திரிகூடம் (முச்சந்தி) என்பதும், திரிவேணிசங்கமஸ்தலமென்பதும், சிருங்காடகம் (நாற்சந்தி) சதுஷ்பீடம் (நாற்பீடம்) என்பனவும் ஒரு ஸ்தலத்திற்கே பெயர்களாம். (௩௬)

शब्दद्वारे गते यत्र गन्धद्वारे तथैव च ।
समायोगैश्चतुःपीठशृङ्गगाटकसुसंज्ञिकम् ॥ ३७ ॥

எந்த இடத்தில் சப்தத்துவாரம் (செவித்துளை) இரண்டும், அவ்வாறே கந்தத்துவாரம் (நாசித்துளை) இரண்டும் சென்று செவ்வையாய்க் கூடுகின்றனவோ, அதனால் அந்த இடம் நாற்பீடம் நாற்சந்தி என்னும்பெயரால் சொல்லப்படுகின்றது. (௩௭)

उच्छ्वासनिश्वासकृता सुवायुना त्रिकूटदेशे मनसा सहांग ।
स्थित्वा सुषुम्नां च तदूर्ध्वनासिकां त्रिकोणमार्गे गमनं कुरुष्व ॥३८॥

பிரியனே உசுவாச நிசுவாசங்கள் செய்யப்பட்ட நல்லவாயுவினால் மனதோடுநின்று, * திரிகோணமார்க்கமாக அதன்மேல் நாசியாகிய சுழுமுனையிற் செல்லுவாயாக. (௩௮)

प्राणानिलस्योद्गमने निरोधे निपातिता चोर्ध्वसुसूक्ष्मशक्तिः ।
प्रत्याहते मद्ध्यगता प्रबोधिता सायोगतो मूलनिकुञ्चनीस्यात् ॥३९॥

பிராணவாயுவின் மேற்செல்லுதலைத் தடுக்கின், ஊர்த்துவமான நற்சூக்ஷ்மசக்தி நிபாதிதமாம் (வீழ்த்தப்பட்டதாம்). அது தடுக்கப்பட்டபோது இடையி(நடுவி)லுள்ளசக்தி விழிப்பிக்கப்பட்டதாம். அது யோகத்தினால் மூலத்தைச் சுருக்குதற் சக்தியாகும் (௩௯)

* புருவநடுஸ்தானத்திற்மேலிருப்பது திரிகோணம்.

तस्मात्त्रिविधशक्तीनां घातेन प्रविबोधनात् ।
आकुञ्चनेन योगीन्द्रो यान्त्यमी परमं पदम् ॥ ४० ॥

ஆதலால் மூவகைச்சக்திகளையும் முறையே வீழ்த்துதலாலும், விழிப்பித்தலாலும், சுருக்குதலாலும் யோகீந்திரன் இப்பரமபதத்தினை அடைகின்றான். (௪0)

अत एव महाश्चर्यं चन्द्रसूर्याग्निसद्मानि ।
सन्धानं कुरु तद्भक्त्या प्रणवध्वनिना सह ॥ ४१ ॥

ஆகலானே சந்திரசூரியாக்கினி மண்டலத்தில் பிரணவத்துவனியோடு அதன் பக்தியாக மகாச்சரியமான அநுசந்தானத்தினைச்செய். (௪க)

त्रयो वेदास्त्रयो देवास्त्रयो लोकास्त्रयो गुणाः ।
ओमित्येकाक्षरे मन्त्रे परे ब्रह्मणि सन्ति वै ॥ ४२ ॥

ஓமென்னும் ஏகாக்ஷரமந்திரமாகிய பரப்பிரஹ்மத்தில் மூன்றுவேதங்களும், மூன்றுதேவர்களும், மூன்றுலோகங்களும், மூன்றுகுணங்களும் இருக்கின்றன. (௪உ)

इति सर्वे च संसिद्धाः विदुः केवलकुंभकम् ।
हरे ह्येकमिदं श्रेष्ठं गोपितं परमाद्भुतम् ॥ ४३ ॥

இவ்வாறு நல்ல சித்தர்கள் எல்லோரும் கேவலகும்பகத்தினை அறிகின்றனர். சிரேஷ்டமும் பரமாற்புதமுமான இவ்வொன்றும் ஹரனிடத்து இரகசியமாய் வைக்கப்பட்டுளது. (௪௩)

गमागमौ प्राणवायोः विधानेन हि गच्छतः ।
यथा तस्य शरीरस्य गमागमविधिस्तथा ॥ ४४ ॥

விதியோடு செல்லுகின்றவனுக்குப் பிராணவாயுவின் போக்குவரத்துகள் எப்படியோ அப்படியே அவனது சரீரத்தின் போக்குவரத்து விதியாம். (௪௪)

सिद्धसम्मतशास्त्रेषु स्थितः केवलकुंभकः ।
तथाप्यतिरहस्यत्वान्नविजानाति मूढधीः ॥ ४५ ॥

சித்தசம்மத சாஸ்திரங்களிலுள்ளதாம் கேவலகும்பகம். அவ்வாறாயினும், அதிரகசியமாயிருத்தலின் மூடபுத்தியானவன் அறிகிறதில்லை. (சரு)

गुरोर्यस्य प्रसादाच्च सिध्येत् केवलकुंभकः ।
यदि किं करणैर्मुद्राबन्धनैरेवमादिभिः ॥ ४६ ॥

ஒருவனுக்குக் குருவின் பிரசாதத்தினால் கேவலகும்பகம் சித்திக்குமாயின், கரணங்களும் முத்திரைகளும் பந்தங்களுமாகிய இவை முதலியவற்றினால் என்ன பிரயோஜனம்? (சசா)

सशब्दे केवले कुंभे प्राप्ते विष्णोः पदं मरुत् ।
तदा खलु तयोरैक्यं जीवात्मपरमात्मनोः ॥ ४७ ॥

निश्शब्दं तत्त्वमित्याहुरनिर्वाच्यं परं पदम् ।
भूतेंद्रियादिप्रकृतेः तत्वानां च लयात्मकम् ॥ ४८ ॥

சப்தத்தோடுகூடிய கேவலகும்பகத்தில் விஷ்ணுவின்பதத்தை வாயு அடையின், அப்போது நிச்சயமாக ஜீவாத்மா பரமாத்மாக்கள் அவ்விரண்டற்கும் ஐக்கியமுண்டாகின்றது. சப்தமின்றிய இதனைத் தத்துவமென்றும், அநிர்வாச்சியமென்றும், பரமானபதமென்றும் கூறுவர். பூதம் இந்திரியமுதலிய பிரகிருதியாகிய தத்துவங்களின் லயவடிவினதாம். (சஅ)

मूलोड्यायणजालबन्धनविधादभ्यासतो योगिनो
वायोरुद्गमने निरंकुशविधेस्तद्व्योमसंरोधनात् ।

भूतानींद्रियवर्गतद्गुणमनोहंचित्तजाड्यादयः
सर्वं लीनमुपैतिवृत्तिरहितं सौख्यं तदाकिञ्चन ॥ ४९ ॥

மூலபந்த உட்டியாணபந்த ஜாலந்தரபந்த வித அப்பியாசத்தினால் யோகிக்கு வாயு மேற்செல்லின், தடையின்றிய விதியினால் அதனை ஆகாயத்தில் நிறுத்துதலால் பூதங்கள் இந்திரியவர்க்கம் அவற்றின் விஷயங்கள், மனது, அகங்காரம், சித்தம், புத்திமுதலியனவுமாகிய யாவும் ஒடுங்குகின்றன. அப்போது ஓர் விருத்தியின்றிய சௌக்கியமுண்டாகின்றது. (சக)

மூலபந்தம்.

योपानसूर्यमथवायुनिरोधनेन
प्राणेन्दुना सह तदूर्ध्वगतं प्रकृत्य ।
योगैकसिद्धिमनिशं कुरुते समस्त
प्रज्ञावतामपि स एव हि मूलबन्धः ॥ ५० ॥

எவன் அபானனாகிய சூரியனை வாயுநிரோதத்தினால் பிராணனாகிய சந்திரனோடு அதன் மேற்சென்றதாக்கி, யோகசித்தி ஒன்றனை இடைவிடாது செய்கின்றானோ, பிரஞ்ஞையுடையவர்களெல்லோருக்கும் அதுவே மூலபந்தமாம். (௫௦)

ஒட்டியானபந்தம்.

अधश्चोर्ध्वं च नाभेर्यो बन्धनं कुरुते बलात् ।
ओड्यायणमनोबन्धरुग्जरामृत्युनाशनः ॥ ५१ ॥

நாபியின் மேற்பாகத்தையும் கீழ்பாகத்தையும் பலத்தினால் (பின்புறமாய் இழுத்துப்)பந்தனம் செய்வது உட்டியாணபந்தனமாம். இது வியாதி ஜரைமரண மென்பவற்றைக்கெடுப்பதாம். ()

ஜாலந்தரபந்தம்.

कण्ठमाकुञ्च्यहृदये स्थापयेच्चिबुकं दृढम् ।
एष जालन्धरोबन्धऊर्ध्वामृतनिबन्धकः ॥ ५२ ॥

கழுத்தைச்சுருக்கி மார்பில் மோவாய்க்கட்டையை (நான்கு விரலளவு இடையிருக்கும்வண்ணம்) செவ்வையாய் நிறுத்தவே

ண்டும். இது ஜாலந்தரபந்தமாம். மேலிருந்து ஒழுகிப்போகும் அமிர்தத்தினைத் தடுப்பதாம். (௫௨)

अथोर्ध्वमध्यस्थिरबन्धनाभ्या माकुञ्चनादूर्ध्वमपानवायोः ।
घ्राणैकरन्ध्रे मरुतांप्रवेशात् शीघ्रं भवेत् केवलकुम्भसिद्धिः ॥ ५३ ॥

இனி மேல் கீழ் ஸ்திரபந்தனமிரண்டினுல் அபானவாயுவை மேலிழுத்தலால் மூக்கின் ஒரு துவாரத்தில் வாயு பிரவேசிக்கின் சீக்கிரம் கேவலகும்பகசித்தி யுண்டாகின்றது. (௫௩)

अयं केवलकुम्भाख्यो यस्याजस्रं वशोभवेत् ।
सदा भवति विख्यातस्स एव प्राणसंयमी ॥ ५४ ॥

இந்தக் கேவலகும்பகமென்பது எவனுக்கு இடைவிடாது வசமாகின்றதோ, அவனே எப்போதும் பிரசித்திபெற்ற பிராணநிரோதமுடையவனுவன். (௫௪)

प्राणायामविधानं यो मासत्रयमुपचरेन्नियतः ।
तनुलघुतादीपनतानाडीशुद्धिध्वनिनिश्चयोस्य भवेत् ॥ ५५ ॥

பிராணுயாமவிதியை எவன் மூன்றுமாசம் நியமமாக ஆசரிக்கின்றுனே, அவனுக்குச் சரீரலகுத்தன்மை, தீபனத்தன்மை, நாடிசுத்தி, துவனிநிச்சயம் என்பன உண்டாகும். (௫௫)

गगनं पवने प्राप्ते तत्क्षणादुन्मनीभवेत् ।
केवलं कुम्भकं प्राप्तो तावदेव समभ्यसेत् ॥ ५६ ॥

ஆகாயத்தை வாயு அடைந்தபோது அக்கணமே உன்மனியாகின்றது. கேவலகும்பகத்தை அடைந்தவன் அதுவரையிலுமே அப்பியசிக்கவேண்டியது. (௫௬)

नत्वा गुरुं ब्रह्मविदां वरेण्यं जित्वान्तरस्थं षडमित्रवर्गम् ।
स्थित्वा सदैकान्तविशुद्धदेशे ध्यात्वा शिवं भ्रूयुगमद्ध्यपद्मे ॥५७॥

பிரஹ்மவித்துக்களின் சிரேஷ்டரானகுருவை நமஸ்கரித்து உள்ளிருக்கும் பகைவர்க்கம் ஆறனையும்வென்று, எப்போதும்

ஏகாந்தமான மிகச்சுத்தமுள்ள இடத்திலிருந்து புருவநடுக்கமலத்தில் சிவத்தை தியானித்து. (ருஎ)

श्रुत्वासदानाहतदिव्यनादं
धृत्वा विभिन्नामलबिन्दुरत्नम् ।
पीत्वा सुधां चन्द्रमसः पतन्तीं
छित्वाथ सङ्कल्पविकल्पजालम् ॥ ५८ ॥

எப்போதும் அநாஹத (சிதைவின்றிய) திவ்விய நாதத்தினைக்கேட்டு விபின்ன (பேதிக்கப்படாத) அமலபிந்துரத்தினத்தைத்தரித்து, சந்திரனிடத்தினின்று ஒழுகுகின்ற அமிர்தத்தினைப் பருகிச் சங்கற்ப விகற்பக்கூட்டத்தினைச் சேதித்து. (ருஅ)

कृत्वा त्रिकूटे दृढबन्धनं ततो गत्वा त्रिकोणे मनसानिलैस्सह ।
भित्वा तथैवोपरिसूक्ष्मकुण्डलीं नीत्वा सखे विष्णुपदं सुखी भव ॥५९॥

திரிகூடத்தில் திடபந்தனத்தைச்செய்து அதன்பின் வாயுவோடு மனதினால் திரிகோணத்தில் சென்று பேதித்து, நண்பனே! அவ்வாறே மேல்சூக்ஷ்மகுண்டலியை விஷ்ணு (வியாபக) பதத்திற்கொண்டுசென்று சுகியாகக்கடவாய். (ருகூ)

इत्थं शिवं विष्णुपदस्वरूपं विष्णुं सदा भावितविष्णुमूर्तिम् ।
विष्णोःपदं केवलकुम्भशुद्धं प्राणाम्बुना स्नानविधौ भजस्व ॥ ६० ॥

இவ்வாறு விஷ்ணுபதசொரூபமான சிவமாகிய விஷ்ணுவை எப்போதும் பாவிக்கப்படும் விஷ்ணுமூர்த்தியினைக் கேவலகும்பகசுத்தமான விஷ்ணுவின்பதத்தைப் பிராணஜலத்தினால் ஸ்நானவிதியில் பஜிப்பாயாக (சுO)

इति श्रीसदाशिवयोगीन्द्रविरचितायां शिवयोगदीपिकायां
अथ द्वितीयःपटलः ।

இவ்வாறு ஸ்ரீ சதாசிவ யோகீந்திரரால் செய்யப்பட்ட
சிவயோகப்பிரதீபிகையில் இரண்டாம் படலம்
முடிந்தது.

# अथ तृतीयः पटलः ।

# மூன்றாம் படலம்.

## ௨, அந்தரங்க சதுரங்க விதானம்.

इति यमादिचतुरंगविधानं बाह्यमुक्तमभिराञ्जितवाक्यैः ।
अथ शिवार्पितमनाश्शृणु वक्ष्ये चांतरंगचतुरंगविधानम् ॥ १ ॥

இவ்வாறு இயமமுதலிய பாகிய சதுரங்கவிதானம் இனிய வாக்கியங்களால் சொல்லப்பட்டது. இனி அந்தரங்க சதுரங்க விதானத்தினைச் சொல்லுகிறேன். சிவத்திற் கொப்புவித்த மனதுடையவனாய் கேட்பாயாக. (க)

### (க) பிரத்தியாகாரம் (கந்தம்).

सन्मनोमहितशाणतलेऽस्मिन् श्रोत्रमुख्यविजितेन्द्रियवर्गात् ।
जातघृष्टविमलामलगन्धैर्लेपनं गुरुसदाशिवलिंगे ॥ २ ॥

நல்லமனமாகிய ஒழுங்கான இச்சாணைக்கல்லில் விசேஷமாய் ஜயிக்கப்பட்ட சுரோத்திரமுதலிய இந்திரியவர்க்கங்களால் தேய்க்கப்பிறந்த மிகச்சுத்தமான கந்தங்களால் குருசதாசிவலிங்கத்தில் பூசுதலைச்செய்க. (௨)

संकोचमाचरति कूर्मइहांगकानां
अंगेयथा भुवि तथा निखिलेन्द्रियाणि ।
प्रत्याहरस्वनियतात्मनि संयतात्मा
मन्यामहे परमतत्त्वमिदं तदेव ॥ ३ ॥

எப்படி ஆமை இங்குத்தரையில் அவயவங்களைத் தனது சரீரத்தில் ஒடுக்கிக்கொள்ளுகிறதோ, அதுபோலச் சம்யமமுடையவனாய்ச் சகல இந்திரியங்களையும் நியதமாய்த் தன்னிடத்து ஒடுக்குவாயாக. இத்தன்மைய அதனையே பரமதத்துவமென்று மதிக்கிறேன். (௩)

## (உ) தியானம் (அர்ச்சனை).

आधारमुख्यनळिनैर्विविधैस्सुवर्णै-
स्तन्मद्ध्यभासुरतरैस्सुमनोभिरङ्ग ।
नानाविधैस्सगुणनिर्गुणभावपुष्पैः
श्रीलिङ्गमूर्तिमनिशं हृदि पूजयस्व ॥ ४ ॥

பிரியனே! பல்வகைநல்வர்ணமுள்ள ஆதாரமுதலிய தாமரைகளால் அவற்றினிடையில் மிக்க பிரகாசமுள்ள நல்லபுஷ்பங்களில் நாநாவித சகுணநிர்க்குணபாவ புஷ்பங்களால் ஸ்ரீலிங்கமூர்த்தியினை இடைவிடாது இருதயத்தில் பூஜிப்பாயாக. (ச)

आधारलिङ्गमणिपूरकहृत्विशुद्धि-
भ्रूमद्ध्यमस्थलनभोबिलसंज्ञकानि ।
एतानि तानि यमिनां सुखदायकानि
द्ध्यानस्थलानि सुविचित्रतराणि नूनम् ॥ ५ ॥

* ஆதாரம் லிங்கம், மணிபூரகம், இருதயம், விசுத்தி, புருவநடு, ஆகாயபிலம் என்னும் பெயருடைய இத்தன்மை அவை யோகிகளுக்கு நிச்சயமாக நல்லவிசித்திரமான சுகத்தைத்தரும் தியானஸ்தலங்களாம். (ரு)

अन्तश्चेतोनियमितबहिश्चक्षुरिष्टासनञ्च
कायावक्रत्वमनिशमहोद्ध्यानमुद्रेयमस्याम् ।
स्वात्मानं स्वगतमविचलं शान्तमद्वैतरूपं
शैवद्ध्यानं कुरुहृदि सखे हृद्य मुक्तस्त्वमेव ॥ ६ ॥

உள்ளே சித்தத்தினை நிறுத்திய வெளிப்பார்வையும், இஷ்டமான ஆசனமும், எப்போதும் உடல் வளையாமையுமாகிய இது ஆச்சரியம்! தியானமுத்திரையாம். நண்பனே! இனியனே! இதில் தனது ஆத்மாவும் தன்னிலிருப்பதும், சலமின்றியதும்,

சாந்தமும், அத்வைதவடிவமுமான சைவத்தியானத்தினை இருதயத்தில் செய்வாயாக. முத்தன் நீயே. (சு)

ध्यानस्थलेषु सर्वेषु नव चक्राणि योगिभिः ।
श्रेष्ठानि तानि कथ्यन्ते वक्ष्यामि शृणु ते ह्यहम् ॥ ७ ॥

தியானஸ்தலங்களெல்லாவற்றிலும் ஒன்பது சக்கரங்கள் யோகிகளுக்கு சிரேஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை யான் உனக்குச் சொல்லுகிறேன். கேள். (எ)

நவசக்கிரம்.

க. மூலாதாரம்.

मूलाधारे त्रिधावृत्तं ब्रह्मचक्रंभगोपमम् ।
तत्कन्देऽग्निनिभां ध्यायेदथ शक्तिमभीष्टदाम् ॥ ८ ॥

மூலாதாரத்தில் மும்முறை விருத்தமான பிரஹ்மசக்கிரம் பகத்தையொத்ததாம். அக்கந்தத்தில் அக்கினியொத்ததும் அபீஷ்டத்தைத் தருவதுமான சக்தியினைத் தியானிக்கவேண்டும். ()

உ. சுவாதிஷ்டானம்.

स्वाधिष्ठानं ततश्चक्रं तत्र चातुर्दलांबुजम् ।
तदेवोड्यायनं ध्यायेत् पश्चिमाभिमुखं शिवं ॥ ९ ॥

அதன்பின் சுவாதிஷ்டான சக்கிரமுளது. அதில் நான்குதளமுள்ள கமலம் உளது. அதுவே உட்டியானமாம். மேற்குமுகமான சிவத்தைத் தியானிக்கவேண்டும். (கூ)

௩. மணிபூரகம்.

पञ्चावर्तं नाभिचक्रं सर्पाकारंतटिन्निभम् ।
तत्र कुण्डलिनीं मध्ये शक्तिं सिद्धिप्रदां स्मरेत् ॥ १० ॥

நாபிசக்கிரம் ஐந்துசுழியுள்ளதும், சர்ப்பவடிவினதும், மின்னலையொத்ததுமாம். அங்கு நடுவில் சித்தியைத்தரும் குண்டலிசக்தியை ஸ்மரிக்கவேண்டும். (க0)

௪. அநாகதம்.

अधोमुखाष्टपत्राब्जयुतं हृच्चक्रमिष्टदम् ।
तन्मध्ये कर्णिकां ज्योतिर्लिङ्गाकारमिमं स्मरेत् ॥ ११ ॥

இருதயசக்கிரம் கீழ்முக எட்டிதழ்க்கமலத்தோடு கூடியதாய் இஷ்டத்தைத்தருவதாம். அதன்மத்தியில் ஜோதிலிங்க வடிவ இந்தக்கர்ணிகையை ஸ்மரிக்கவேண்டும். (௧௧)

௫. விசுத்தி.

पञ्चमं कण्ठचक्रञ्च तत्रांगुलिचतुष्टये ।
इडापिङ्गलयोर्मध्ये सुषुम्नां सुस्थितां स्मरेत् ॥ १२ ॥

ஐந்தாவது கண்டசக்கிரம். நான்கு விரற்கடையளவுள்ள அதில் இடைபிங்கலைகளினிடையில் செவ்வையாய் நிலைத்துள்ள சுழுமுனையை ஸ்மரிக்கவேண்டும். (௧௨)

௬. கண்டிகாலிங்கமூலம்.

षष्ठञ्च घंटिकालिङ्गमूलं तद्राजदन्तकम् ।
ध्यायेत्तदूर्ध्वं तद्वारं तत्र शून्यं सुसिद्धये ॥ १३ ॥

ஆறுவது கண்டிகாலிங்கமூலம் (உண்ணாக்கின்அடி) அது ராஜதந்தங் (முன்பற்)களையுடையதாம். அதற்குமேல் அங்கு நல்லசித்தியின்பொருட்டு அத்துவாரமாகிய சூநியத்தினைத்தியானிக்கவேண்டும். (௧௩)

௭. பூசக்கிரம்.

भूचक्रं सप्तमन्त्वेकं नालं कन्दं सुवाक्प्रदम् ।
ध्यायेद्दीपशिखाकारं तन्मध्ये ज्ञानलांछनम् ॥ १४ ॥

ஏழாவது பூசக்கிரம் ஒருநாளமுடையகந்தமாம். நல்லவாக்கைத்தருவதாம். அதன்நடுவில் தீபசிகைவடிவ ஞானக்குறியினைத் தியானிக்கவேண்டும். (௧௪)

அ. நிர்வாணசக்கிரம்.

ब्रह्मरन्ध्रेऽष्टमं चक्रं निर्वाणाख्यं सुसूक्ष्मकम् ।
तत्र जालन्धरं धूमशिखाभं मोक्षदं स्मरेत् ॥ १५ ॥

பிரஹ்மரந்திரத்தில் நல்லசூக்ஷ்மமான நிர்வாணமென்னும் எட்டாவது சக்கிரமுளது அங்குத் தூமசிகையொத்ததும் மோக்ஷத்தைத்தருவதுமான ஜாலந்தரத்தினை ஸ்மரிக்கவேண்டும். (கரு)

கூ. ஆகாசசக்கிரம்.

आकाशचक्रं नवमं प्रशस्तं हेमाटकं पूर्णगिरीशपीठम् ।
तत्रोर्ध्वशक्तिं शुभदां सुशून्यां ध्यायेद्द्वयाष्टारसरोजमध्ये ॥ १६ ॥

ஒன்பதாவது ஆகாசசக்கிரம் சிலாக்கியமானதும் ஹேமாடக (திரிகூட)மும், பூர்ணகிரீசபீடமுமாம். அங்குப்பதினாறு இதழ்க்கமலநடுவில் நல்லசூநியமும் சுபத்தைத்தருவதுமான ஊர்த்துவசக்தியைத் தியானிக்கவேண்டும். (கசா)

ஷோடசாதாரம்.

முதல் ஆதாரம்.

अथ ते षोडशाधारान् कथयामि विशेषतः ।
तेजोध्यानं पदांगुष्ठे कुर्याद्दृष्टिःस्थिराभवेत् ॥ १७ ॥

இனிப்பதினாறுதாரங்களை விசேஷமாய் உனக்குச்சொல்லுகின்றேன். க பாதாங்குஷ்டத்தில் தேஜோதியானத்தைச் செய்யவேண்டும். திருஷ்டிஸ்திரமுடையதாம். (கள)

இரண்டாவது ஆதாரம்.

पादस्य पार्ष्णिकामूलं द्वितीयाधारसंज्ञिकम् ।
संपीड्य स्थापयेदग्निदीपनं भवति क्षणात् ॥ १८ ॥

பாதத்தின் புறங்காலடி இரண்டாவது ஆதாரமென்னும் பாதத்தின் மேற்பாக அடியை (கைகளினால்) செவ்வையாய்ப்பிடித்து நிறுத்தவேண்டும். க்ஷணத்தில் அக்கினிதீபன முண்டாகின்றது. (கஅ)

மூன்றாவது ஆதாரம்.

आकुञ्चयेत्तथाधारं सदा संकोचनेन तु ।
अपानमरुतस्थैर्यं जायते तत्रलीयकम् ॥ १९ ॥

அவ்வாறு ஆதாரத்தை எப்போதும் சுருக்குதலால் அங்குலயமாகிய அபானவாயுவின் ஸ்திரத்தன்மை உண்டாகின்றது. ()

நாலாவது ஆதாரம்.

मेढ्रागारे दण्डसङ्कोचनेन ब्रह्मग्रन्थीन् त्रीन् सुमुत्पाट्यपश्चात् ।
चेतोवायूवज्रनाड्यां प्रवेशात् बिन्दुस्तम्भस्सम्भवत्येव सिद्धम् ॥२०॥

இலிங்கஸ்தானத்தில் தண்டசங்கோசத்தினால் (சுருக்குதலால்) பிரஹ்மகிரந்திமுதலிய மூன்றனையும் செவ்வையாய்ப்பேதித்துப் பின் சித்தமும் வாயுவும் வஜ்ரநாடியில் பிரவேசித்தலால் விந்து ஸ்தம்பனம் சம்பவிக்கவே செய்கின்றது. நிச்சயம். (உ0)

ஐந்தாவது ஆதாரம்.

पञ्चमाधारमोड्यानं मासं दत्वा मुहुर्मुहुः ।
मलमूत्रक्रुमीणां च मारणं भवति ध्रुवम् ॥ २१ ॥

ஐந்தாவது ஆதாரமான உட்டியானத்தை ஒருமாசம் அடிக்கடி கொடுத்து, அதனால் மலமூத்திரகிருமிகளின் மாரணம் நிச்சயமாக உண்டாகின்றது. (உக)

ஆறாவது ஆதாரம்.

नाभ्याधारे ततः षष्ठे प्रणवं यो वदेद्बुधः ।
समाधिनैकचित्तेन तस्य नादेलयो भवेत् ॥ २२ ॥

அதன்பின் ஆறுவதாகிய நாபியாதாரத்தில் பிரணவத்தை எந்த அறிஞன் சொல்லுகின்றானோ, அவனுக்கு ஒருமைமனமாகிய சமாதியினால் நாதத்தில் லயமுண்டாகின்றது. (௨௨)

ஏழாவது ஆதாரம்.

सप्तमं तु हृदाधारं तत्र प्राणन्निरोधयेत् ।
तदा तन्मध्यकमलं विकासो भवति क्षणात् ॥ २३ ॥

ஏழாவது இருதயாதாரம். அங்குப் பிராணனை நிரோதிக்க வேண்டும். அப்போது அதன் நடுக்கமலம் க்ஷணத்தில் விரிகின்றது. (௨௩)

எட்டாவது ஆதாரம்.

कण्ठाधारं कण्ठमूलं पीडयेत् चिबुकेन तु ।
इडापिंगलयोर्वायुप्रवाहस्सुस्थिरोभवेत् ॥ २४ ॥

எட்டாவது கண்டாதாரம் கண்டமூலத்தினை (கழுத்தினடியினை) மோவாய்க்கட்டையினால் பீடிக்கவேண்டும். இடைபிங்கலை யிரண்டன் வாயுப்பிரவாகம் மிகஸ்திரமுடையதாகின்றது. (௨௪)

ஒன்பதாவது ஆதாரம்.

नवमं घंटिकाधार जिह्वाग्रं तत्र दापयेत् ।
सुधासारं स्रवत्येव सदा संतृप्तिकारणम् ॥ २५ ॥

ஒன்பதாவது கண்டிகாதாரம். அதில் நாநுனியைச் செலுத்தவேண்டியது. நல்லதிருப்திக்குக் காரணமான அமிர்ததாரை எப்போதும் ஒழுகவே செய்கின்றது. (௨௫)

பத்தாவது ஆதாரம்.

या लम्बिका छालनदोहनाभ्भां दीर्घीकृतां तां विपरीतमार्गात् ।
यस्तालुमूलान्तरगर्भदेशे प्रवेशयेत् सोन्मनितां प्रयाति ॥ २६ ॥

எந்த நாவானது சாலன தோஹனங்களால் நீட்டப்பட்டதோ அதனை விபரீத மார்க்கமாக எவன் அண்ணத்தின் அடியிலிருக்கும் உள் கர்ப்ப தேசத்தில் பிரவேசிக்கச் செய்கின்றானோ அவன் உன் மனித்தன்மையை யடைகின்றான். (உசா)

பதினோராவது ஆதாரம்.

जिह्वादो रसनाधारं कुर्याद्यो मथनं यदि ।
सिध्येत्तस्यामृतास्वादः कविता च स्फुटा भवेत् ॥ २७ ॥

நாவாதியில் இரஸனாதாரத்தை எவன் மதனஞ் செய்கின்றானோ அவனுக்கு அமிர்தத்தைப் பருகுதல் சித்திக்கின்றது. தெளிவான கவிதையும் உண்டாகின்றது. (உஎ)

பன்னிரண்டாவது ஆதாரம்.

द्वादशं दशनाधारमूर्ध्वन्तद्राजदन्तकम् ।
षाणमासाद्दृश्यते ज्योतिरन्तर्जिह्वाग्रघट्टनात् ॥ २८ ॥

பன்னிரண்டாவது பல்லாதாரம் அதுமேல் ராஜதந்தத்தினையுடையதாம். ஆறுமாதத்தில் உள்ளில் நானுனியைத் தேய்த்தலால் ஜோதியானது காணப்படுகின்றது- (உஅ)

பதின்மூன்றுவது ஆதாரம்.

त्रयोदशं घ्राणमूलं तत्र दृष्टिस्थितिः कृता ।
यदि चेन्मनसा नित्यं वायुस्तत्र स्थितो भवेत् ॥ २९ ॥

பதின்மூன்றுவது கிராணமூலம் அங்கு திருஷ்டியின் ஸ்திதி செய்யப்படுமாயின், அங்கு மனதோடு வாயு நித்தியம் நிலைத்ததாகும். (உகூ)

பதினான்காவது ஆதாரம்.

चतुर्दशं ललाटाख्यमाधारं तत्र योगवित् ।
मनसा वायुमारोप्य सर्वसिद्धिमवाप्नुयात् ॥ ३० ॥

பதினான்காவது லலாடமென்னும் ஆதாரம். அங்கு யோக முணர்ந்தவன் மனதோடு வாயுவை ஏற்றிச் சர்வ சித்தியுமடைகின்றான். (௩௦)

பதினைந்தாவது ஆதாரம்.

भ्रुवाधारं पञ्चदशं तदूर्ध्वं चक्षुषा बुधः ।
पश्येत्संकिरणाकारं शीघ्रमेव हि पश्यति ॥ ३१ ॥

பதினைந்தாவது புருவாதாரம். அதன்மேல் நேத்திரத்தினால் அறிஞன் பார்க்கவேண்டும். நல்லகிரண வடிவத்தினைச் சீக்கிரமாகவே காண்கின்றான். (௩௧)

பதினாறாவது ஆதாரம்.

नेत्राधारं षोडशं तु तदूर्ध्वं चालयेद्बुधः ।
ज्योतिःपुञ्जमपांगेतत् पश्यति क्षिप्रमेव हि ॥ ३२ ॥

பதினாறாவது நேத்திராதாரம். அதனை அறிஞன் அசைப்பிக்கவேண்டும். கடைக்கண்ணில் அந்த ஜோதிக்கூட்டத்தினைச் சீக்கிரமாகவே காண்பான். (௩௨)

बंधत्रयेणासनबन्धनेन मन्त्रेण नादश्रवणेन योगी ।
भवेत्तदा केवलकुम्भकेन ध्यानेन चित्ताष्टविधावधानी ॥ ३३ ॥

பந்த மூன்றினால், ஆசன பந்தனத்தினால், மந்திரத்தினால், நாதசிரவணத்தினால், கேவல கும்பகத்தினால், தியானத்தினால் அப்போது யோகி சித்தத்தின் எட்டுவித அவதான முடையவனாகின்றான். (௩௩)

மூன்று தாரணை (தூபம்.)

देहपात्रे ज्वलत्ज्ञानवह्नौ भूतगुणाधिकम् ।
एवं दशांगवल्लिंगं धूपयेद्धारणाद्बुधः ॥ ३४ ॥

தேகபாத்திரத்தில் பிரகாசிக்கின்ற ஞானாக்கினியில் பூத குண்டிகத்தினை அறிஞன் தாரணையினால் தசாங்கம்போல் இவ்வாறு லிங்கத்திற்குத் தூபம்போடுக. (௩௪)

௪. தியானம்.

ध्यानैकगोचरमतिस्थिरताभवेद्या
साधारणेति शिवयोगविदो वदन्ति ।
शैवक्रमेण रचितेह पुनःप्रकारात्
भूम्यादिभूतधरणेन पृथक् पृथक् च ॥ ३५ ॥

தியான மொன்றனைக் கோசரிக்கும் எந்தமதி ஸ்திரத்தன்மையாகின்றதோ, அது தாரணையென்று சிவயோக முணர்ந்தவர் கூறுவர். இது சைவக்கிரமத்தினா லாக்கப்பட்டதாம் மறுபடியும் வேறு வகையால் பூமி முதலிய பூதத்தைத் தரித்தலால் வேறுவேறாம். (௩௫)

பஞ்சதாரணை.

धारिणी वारुणी चैव आग्नेया मारुती तथा ।
नभोमयीति कथ्यन्ते सूरिभिः पञ्च धारणाः ॥ ३६ ॥

தாரிணீ (பிருதிவிதாரணை) வாருணீ (ஜலதாரணை) ஆக்னேயா, மாருதீ (வாயுதாரணை) நபோமயீ (ஆகாசதாரணை) என்று ஐந்து தாரணைகள் அறிஞர்களால் சொல்லப்படுகின்றன (௩௬)

अत एव तथाऽप्रोक्ता धारणा योगवित्तमैः ।
सर्वसिद्धिप्रदास्ताश्च सदा भ्यासरतात्मनाम् ॥ ३७ ॥

இதனாற்றான் யோகமுணர்ந்தவர்களால் தாரணை அவ்வாறு சொல்லப்பட்டது. அவை எப்போது மப்பியசிப்பவர்கட்குச் சர்வ சித்தியையும் தருவனவாம். (௩௭)

பூமிதாரணை

पादादिजान्वन्तमहीतलेऽस्मिन् वायुं लकारेण समाधिरोप्य ।
स्मरन् चतुर्बाहुधरं चतुर्मुखं सन्धारयेद्भूमिजयं समाप्नुयात् ॥३८॥

பாதமுதல் முழங்கால பரியந்தமான பிருதிவிஸ்தானத்தில் லகாரத்தால் வாயுவைச் செவ்வையாய் நிறுத்தி, நான்கு புயந் தரித்த நான்குமுக மூர்த்தியை ஸ்மரித்துச் செவ்வையாய்த்தரிக்க வேண்டும். பூமிஜயத்தை நன்கு பெறுகின்றான். (௩௮)

ஜலதாரணை.

वकारेणोपेतं सलिलनिलये जानुनाभ्यन्तदेशे
स्थिरं कृत्वावायुं मधुरिपुममुं संस्मरेत् पीतचेलं ।
प्रसन्नास्यंशुद्धस्पटिकमणिनिभंशङ्खचक्रांकबाहुं
जलादुत्पन्नोद्यद्भयजयमहत्त्वं भजेद्वारुणियम् ॥ ३९ ॥

முழங்கால் முதல் நாபிபரியந்த இடமாகிய ஜல ஸ்தானத்தில் வகாரத்தோடு கூடியதான வாயுவை நிறுத்தி, இந்த மதுவசுரப்பகைவரும், பீதாம்பரரும், பிரசன்ன முகத்தினரும், சுத்தஸ்படிகம் போன்றவரும், சங்கு சக்கிரந் தாங்கிய கையினருமாகிய மூர்த்தியை ஸ்மரித்து தாரணை பண்ணினால், ஜலத்தினின்றுண்டாகும் பயத்தின் ஜயத்தைப் பெறுகின்றான். (௩௯)

அக்கினிதாரணை.

नाभेः कण्ठान्तदेशे वरशिखिनिलये वायुमारोप्यरेफात्
त्र्यक्षंरुद्रस्वरूपं तरुणरविनिभं भस्मनोद्धूलितांगम् ।
शान्तं शीघ्रप्रसन्नं वरदमभयदं संस्मरन् भावयेत्तं
यस्तस्याभ्यासिनोऽग्नेर्भयहरणमिहासंभवेद्धारणायाः ॥ ४० ॥

நாபிமுதல் கண்டபரியந்த தேசமாகிய மேலான அக்கினி ஸ்தானத்தில் ரகாரத்தோடு வாயுவை நிறுத்தி, திரிநேத்திரரும், தருண சூரியன் போன்றவரும், நீறுபூசிய மேனியரும், சாந்தரும், சீக்கிரப்பிரசன்னரும் வரத்தைத் தருபவரும், அபயத்

தைத் தருபவருமான ருத்திர சொரூபரை ஸ்மரித்து, எவன் அவரைப் பாவிக்கின்றானோ, அவ்வப்பியாசிக்குத் தாரணையினால் இங்கு அக்கினியின்பய நீக்கமுண்டாகின்றது. (சo)

வாயுதாரணை.

गलादि भ्रुवोर्मध्यदेशे समीरस्थले यान्तवर्णेन देदीप्यमानम् ।
प्रकाशस्वरूपं स्मरेदीश्वरं यः सखे वायुवत् क्रीडतीशप्रभावात् ॥४१॥

கண்டமுதல் புருவநடுபரியந்த தேசமாகிய வாயுஸ்தானத்தில் யகாரத்தோடு சொலிக்கின்ற பிரகாசசொரூப ஈசுவரனை எவன் ஸ்மரிக்கின்றானோ, நண்பனே! அவன் ஈசனது பிரபாவத்தினால் வாயுவைப்போல் கிரீடிக்கின்றான். (சக)

ஆகாயதாரணை.

आभ्रूमध्यादिकान्ते पवनमतिदृढं व्योमदेशे प्रकुर्वन्
सोमं सोमार्धमौलिं दशकरकमलं पञ्चवक्त्रं त्रिनेत्रम् ।
श्रीकण्ठं सायुधन्तं समधिकवरदं सर्वतत्त्वादितत्त्वं
बिन्दुंव्योमस्वरूपंशिवमभययुतं चिन्तयेद्यस्समुक्तः ॥ ४२ ॥

புருவ நடுமுதல் சிரசுபரியந்தமான ஆகாயஸ்தானத்தில் ஹகாரத்தோடு வாயுவை நிறுத்தி, உமையையுடையவரும், பாதிப்பிறை முடியினரும், பத்துக் கரகமலத்தரும், ஐந்துமுகத்தினரும், முக்கண்ணரும், அழகியகண்டத்தரும், எல்லா ஆயுதங்களையும் தரித்தவரும், மிக்கநல்வரதரும், எல்லாத் தத்துவங்களின் ஆதிதத்துவரும், விந்துவடிவரும், ஆகாய சொரூபரும், அபயமுடையவருமான சிவனை எவன் சிந்திக்கின்றானோ அவன் முக்தன். (சஉ)

इत्येवन्धारणाःपञ्च घटिकापञ्चकान्विताः ।
एकैकान्धारयेत्ताभिः देहसिद्धिं भजेन्नरः ॥ ४३ ॥

இவ்வாறு நாழிகை ஐந்தோடு கூடிய ஐந்து தாரணைகளையும் தனித்தனியே தரிப்பானாயின், அவற்றால் நரன் தேக சித்தியையடைகின்றான். (சங)

एतासु भूम्यादिकधारणासु नृणा सदा प्राणनिरोधनेन ।
येदोषजास्सर्वपुराणरोधाः नश्यन्ति शीघ्रं न हि संशयोऽत्र ॥४४॥

இந்தப் பூமி முதலிய இத்தாரணைகளில் எப்போதும் பிராணனை நிறுத்துதலால் தோஷத்தினுலுண்டாகிய எல்லாப் பழய வியாதிகளும் சீக்கிரத்தில் நசிக்கின்றன. இதிற் சம்சயமில்லை. (சச)

ज्ञानेन कर्मणा पञ्च धारणा योगिभिर्धृताः ।
समभ्यासरता यत्र तरन्ति भवसागरम् ॥ ४५ ॥

ஐந்து தாரணைகளும் ஞானத்திலும் கர்மத்திலும் யோகிகளால் தரிக்கப்படின், சமமான அப்பியாசஞ் செய்யும் அவர்கள் பவசாகரத்தைக் கடக்கின்றனர். (சரு)

—इय धारणा अथ समाधिः—

இது தாரணை. இனிச் சமாதி. (நைவேத்தியம்)

सुज्ञानदीपं सुधियावलम्ब्य हृदालये त्वन्मनसासहाङ्ग ।
स्वात्मोपहारं परमात्मलिंगे समाधिनास्मिन् विनिवेशयस्व ॥ ४६ ॥

நல்லஞானதீபத்தினை நல்லபுத்தி (யாகியகை) யால் அவலம்பித்து இருதயாலயத்தில் உனது மனதோடுகூட பிரியனே! சுவாத்மாவாகிய நைவேத்தியத்தினை இப்பரமாத்மலிங்கத்தில் சமாதியினுல் பிரவேசிக்கச் செய்வாயாக. (சசா)

जलसैन्धवयोर्वथैक्ययोगो भवतितद्वदिहयाति सामरस्यम् ।
मनसश्च सदात्मनश्च योगात् समाधिस्थितिः कथ्यते यमीन्द्रैः ॥४७॥

அப்பு உப்புக்களிரண்டன் ஐக்கிய சம்பந்தம் எப்படி யுண்டாகின்றதோ, அதுபோல இங்கு எப்போதும் மன வாத்மாக்களின் சேர்க்கையால் சமரஸத்தன்மையை யடைகின்றது. இது சமாதிஸ்திதி யென்று யோகீந்திரர்களால் சொல்லப்படுகின்றது. (சஎ)

यदा भवति चैकत्वं जीवात्मपरमात्मनोः ।
तदा समाध्यवस्थायां गमिष्यन्ति यमीश्वराः ॥ ४८ ॥

ஜீவாத்ம பரமாத்மாக்களிருவரின் ஐக்கியம் எப்போது உண்டாகின்றதோ அப்போது யோகீசுவரர்கள் சமாதியவஸ்தையினை அடைகின்றனர். (சஅ)

श्रोत्रादीनि न चेन्द्रियाणि विषयाश्शब्दादयोऽहम्मनो
वृत्तिर्नैव सुखासुखानि च तथा मानावमानावपि ।
शीतोष्णामितपुण्यपापसुमहासंकल्पजालान्यहो
नैवोनन समाधिना सह मनोलीने परब्रह्मणि ॥ ४९ ॥

இச்சமாதியினால் மனது பரப்பிரஹ்மத்தில் ஒடுங்கியபோது சுரோத்திராதி இந்திரியங்களும், சப்தாதி விஷயங்களும், அகங்காரமும், மனதும், விருத்தியுமில்லை. சுகதுக்கங்களும் இல்லை. அப்படியே மானவமானமும், சீதோஷ்ணமும், அளவிறந்த புண்ணியபாபமும், நல்ல பெருஞ் சங்கற்பக் கூட்டங்களும் இல்லவே இல்லை. ஆச்சரியம்! (சகூ)

युक्ताहारो मुनीन्द्रो निरशनपर एवाथवा युक्तनिद्रो
निद्रात्यक्तो गुहायां वसति विचरति क्ष्मातले निस्पृहात्मा ।
नानाकर्मक्रियासु प्रथितकुशलयुक्तोऽपि वा निष्क्रियो वा
नानाचेष्टास्वजस्रं विहरति च समाधौ समासक्तचेताः ॥ ५० ॥

முநீந்திரன் தக்க ஆகாரமுடையனாகவாவது அல்லது ஆகாரமில்லாதவனாகவாவது, தக்கநித்திரையுடையவனாகவாவது நித்திரையை விட்டவனாகவாவது குகையில் வசிக்கின்றான். ஆசையின்றியவனாய்ப் பூமியில் சஞ்சரிக்கின்றான். நாநாகர்மக்கிரியைகளில் மிக்கசாமர்த்தியமுடையவனாகவாவது அல்லது கிரியையில்லாதவனாகவாவது சமாதியில் செவ்வையாய்ப் பற்றியமனதினனாய் நாநாசேஷ்டைகளில் இடைவிடாது நடக்கின்றான். (ருO)

एवमष्टांगयोगेन हटेनानेन नैष्ठिकः ।
अनालस्यकृताभ्यासात् सिद्धिर्याश्शृणु तस्यताः ॥ ५१ ॥

இவ்வாறு அஷ்டாங்கயோகமான ஹடத்தினால் நைஷ்டிகன் சோம்பலின்றிச் செய்யப்பட்ட அப்பியாசத்தினால் பெறும்சித்தி எவையோ அவற்றைச் சொல்லுகிறேன் கேள். (ருக)

प्रथमेहतरुक्षे सर्वलोकप्रियोभव
वत्सरेच द्वितीयेऽथ कवितां कुरुते सुवाक्
भुजगाद्यैस्तथादुष्टैस्तृतीये न प्रबाध्यते ॥ ५२ ॥

முதல்வருஷத்தில் ரோகமொழிந்தவனாய்ச் சர்வலோகப் பிரியனாவாய். இரண்டாவது வருஷத்தில் நல்லவாக்குடையவனாய்க் கவிதை செய்கின்றான். மூன்றாவது வருஷத்தில் பாம்பு முதலியவற்றாலும் அப்படியே துஷ்டப்பிராணிகளாலும் பாதிக்கப்படுகிறதில்லை. (ருஉ)

चतुर्थकेनेहातुरक्षुत्पिपासा निद्रादिशीतातपवर्जितस्स्यात् ।
दूरश्रवाः पञ्चमवत्सरेवाक् सिद्धिं परेषां तनुषु प्रवेशः ॥ ५३ ॥

நான்காவது வருஷத்தில் இங்கு ஆதுரமான பசி தாகம் நித்திரைமுதலியன சீதம் வெப்பமென்பன நீங்கியவனாகின்றான். ஐந்தாவது வருஷத்தில் தூரசிரவணமும் வாக்குச்சித்தியும் பிறர் சரீரத்திற் பிரவேசித்தலுமுண்டாகின்றது. (ருங)

षष्ठेनवज्रैरपिनैवभिद्यते ततोतिवेगीचसदूरदर्शनः ।
त्यजेद्भुवं सप्तमवत्सरेऽथ विभूतयस्तस्य भवेयुरष्टमे ॥ ५४ ॥

ஆறாவது வருஷத்தில் வஜ்ராயுதங்களாலும் பேதிக்கப்படுதில்லை. அதன்பின் ஏழாவது வருஷத்தில் அதிவேகமுடையவனும் தூரதிருஷ்டியுடையவனுமாய்ப் பூமியைவிடுகிறான். எட்டாவது வருஷத்தில் அவனுக்கு விபூதிகளுண்டாகும் (ருச)

गगनेचरो दिग्चरो नवमेऽब्देयस्तुवज्रकायस्स्यात्
समनोवेगी दशमे यत्रेच्छा तत्र गच्छति प्रमनाः ॥ ५५ ॥

ஒன்பதாவது வருஷத்தில் ஆகாயத்தில் சரிப்பவனும் திக்கில் சரிப்பவனும் வஜ்ரகாயனுமாகின்றான். பத்தாவது வருஷத்தில் பெருமனதுடையவனாய் மனோவேகமுடையவனாய் எங்கு இச்சையோ அங்குச்செல்லுகின்றான். (௫௫)

एकादशके वर्षे सर्वज्ञस्सिद्धिमान् भवेद्योगी ।
द्वादशके शिवतुल्यो कर्ता हर्ता स्वयं भवति ॥ ५६ ॥

பதினோராவது வருஷத்தில் யோகி சர்வஞ்ஞனாய்ச் சித்தியுடையவனாகின்றான். பன்னிரண்டாவது வருஷத்தில் சிவசமானனாய்ச் செய்பவனும் அழிப்பவனும் தானேயாகின்றான். (௫௬)

द्वादशवर्षैरेवं सद्गुरुनाथस्य पादयोर्भक्त्या ।
निर्विघ्नेन धृतात्मासिद्धो भवतीति जनाभिगम्यः ॥ ५७ ॥

இவ்வாறு பன்னிரண்டுவருஷம் சற்குருநாதனது பாதங்களில் பக்தியோடு நிர்விக்கினமாகத் தரித்தவன் சித்தனாகின்றான் என்பது ஜனங்களால் அறியப்படுவதாம். (௫௭)

अत एव महाश्चर्यं योगमष्टांगमादरात् ।
शिवपूजांगमेताद्धि त्वमेवाभ्यासनं कुरु ॥ ५८ ॥

ஆகலானே இந்தச் சிவபூஜாங்கமான மகாச்சரியமுள்ள அஷ்டாங்கயோகத்தினை நீயே அப்பியாசஞ் செய்வாயாக. (௫௮)

निरन्तरकृताभ्यासात् जरामरणवर्जितः ।
सजीवेदिच्छयालोके ततो मुक्तिमवाप्नुयात् ॥ ५९ ॥

நிரந்தரஞ் செய்யப்பட்ட அப்பியாசத்தினால் ஜராமரணமொழிந்தவனாய் அவன் இச்சைப்படி உலகத்தில் ஜீவிப்பன் அதனால் முக்தியை யடைவான். (௫௯)

यमेन नियमेनैव मन्ये भक्तः शिवः स्वयम् ।
स्थिरासनसमायुक्तो महेश्वरपरान्वितः ॥ ६० ॥

இயமத்தினாலும் நியமத்தினாலும் பக்தன் ஸ்வயம் சிவமாகின்றான். ஸ்திராசனத்தோடு கூடியவன் மகேசுவர பதமடைகின்றான். (௬௦)

चराचरलयस्थानं लिंगमाकाशसंज्ञिकम् ।
प्राणेत व्योम्नि संलीने प्राणलिंगी भवेन्नरः ॥ ६१ ॥

சராசரலயஸ்தானமாகிய லிங்கம் ஆகாயப் பெயரினதாம். ஆதலால் பிராணன் ஆகாயத்திற் செவ்வையாய் ஒடுங்கியபோது * பிராணலிங்கியாகின்றான் நரன். (௬௧)

प्रत्याहारेण संयुक्तः प्रसीदति न संशयः ।
ध्यानधारणसंयुक्तो चरणस्थलवान् सुधीः ॥ ६२ ॥

பிரத்தியாகாரத்தோடுகூடியவன் பிரசாதமு (தெளிவு)டையவனாகின்றான், சம்சயமில்லை. தியானதாரணத்தோடு கூடியவன் † சரண ஸ்தலமுடைய நல்லபுத்தியுடையவனாகின்றான். ()

लिंगैक्याद्वैतभावात्मा निश्चलैक्यसमाधिना ।
एवमष्टाङ्गयोगेन वीरशैवो भवेन्नरः ॥ ६३ ॥

நிச்சல ஐக்கிய சமாதியுடையவன் லிங்கைக்கியாத்வைத பாவவடிவனாகின்றான். இவ்வாறு அஷ்டாங்கயோகத்தினால் நரன் வீரசைவனாகின்றான் (௬௩)

---

* இங்கு வீரசைவ சித்தாந்தத்தின்படி சூக்ஷ்மசரீரத்தில் தரிக்கப்பட்ட லிங்கம் பிராணலிங்க மெனப்படுமாகலின், அதனைத்தரித்த இவனை பிராணலிங்கி யென்றார்.

† சரணஸ்தலமென்பதும் வீரசைவபரிபாஷை.

तस्मात्सर्वप्रयत्नेन कर्मणा ज्ञानतोऽपि वा ।
त्वमप्यष्टांगयोगेन शिवयोगी भवानघ ॥ ६४ ॥

இவ்வாறு முழுப்பிரயத்தினத்தினால் கர்மத்தினாலாவது ஞானத்தினாலாவது பாபமற்றவனே! நீயும் அஷ்டாங்க யோகத்தினால் சிவயோகியாவாய். (௬௪)

। इति श्रीसदाशिवयोगीन्द्रविरचितायां शिवयोगदीपिकायां तृतीयः पटलः ।

இவ்வாறு ஸ்ரீ சதாசிவ யோகீந்திரரால் செய்யப்பட்ட
சிவயோகப்பிரதீபிகையில் மூன்றாம் படலம்
முடிந்தது.

## अथ चतुर्थः पटलः

ஸ்ரீ குருப்யோ நம:

## நான்காம் படலம்.

यत् सर्वगं श्रुतिशिरःपरमैकमाद्यं
ज्योतिर्मयं दृढविरक्तजनाभिगम्यम् ।
गोसंस्थितं गुरुसदाशिवयोगिनाथं
लिङ्गस्वरूपमहमन्वहमाश्रयामि ॥ १ ॥

எது எல்லாவற்றினிருப்பதும், வேதச்சிரத்ததும், ஏகமும், முதன்மையானதும், ஜோதிமயமும், திடவிரக்தியுள்ளவர்களா லறியத்தக்கதும், கோவிலிருப்பதும், குருசதாசிவயோகி நாதருமாமோ அந்த லிங்க சொரூபத்தினையான் தினந்தோறும் ஆசிரயிக்கின்றேன். (க)

राजयोगःपरिग्राह्यो विद्वद्भिस्तेन हेतुना ।
यस्य साधनमष्टाङ्गहटयोग इहोच्यते ॥ २ ॥

இராஜயோகம் வித்வான்களால் கிரகிக்கத்தக்கதாம். அந்த ஹேதுவினால் அதன் சாதனமான அஷ்டாங்கயோகம் இங்கு சொல்லப்படுகின்றது. (உ)

पूर्वोक्ताष्टविधाङ्गानि हठे तानि स्थितानि च ।
एकैकश्लोकरूपेण कृतानि च मया शृणु ॥ ३ ॥

முற்கூறிய எட்டுவித அங்கங்களாகிய அவை ஹடத்திலுள்ளனவாம். ஒவ்வொரு சுலோக வடிவமாக என்னாற் செய்யப்பட்டுள்ளன. கேள். (௩)

## * ஞானாஷ்டாங்க யோகம்.

### க. இயமம்.

आहारनिद्रेन्द्रियदेहसर्वव्यापारशीतातपवर्जितानां ।
जयश्च शान्तिश्च भवेद्यमाङ्गः शनैश्शनैस्साधयितुं स योग्यः ।। ४ ।।

ஆகாரம் நித்திரை இந்திரியம் தேகமென்பவற்றின் எல்லா வியாபாரமும், குளிர்வெயிலுமில்லாதவர்களின் ஜயமும் சாந்தியும் யமாங்கமாகும் அது மெல்ல மெல்லச் சாதிக்கத்தக்கதாம். ()

### உ. நியமம்

भक्तिर्गुरौ परमतत्वपदेऽनुरक्ति-
र्निस्सङ्गता स्वयमुपागतलाभतुष्टिः ।
एकान्तवासपरता च मनोनिवृत्तिः
वैराग्यभाव इति ये नियमास्त एव ।। ५ ।।

குருவினிடத்துப் பக்தி, பரமதத்துவபதத்தில் ஆசை, சங்கமின்மை, இயல்பாகவந்த லாபத்தில் சந்தோஷம் (திருப்தி), ஏகாந்தவாச பரத்துவம், மனோநிவிருத்தி, வைராக்கியபாவம் என்பன எவையோ அவையே நியமங்களாம். (ரு)

### ௩. ஆசனம்.

स्वस्वरूपे सर्वकालमासनत्वं सुखासनः ।
सर्ववस्तुन्युदासीनभावश्चासनमीरितम्।। ६ ।।

---

* "இதிற் கூறியுள்ள ஞானாஷ்டாங்கயோகம் மண்டலப்பிராஹ்மணோபநிஷத்திலும் திரிசிகியுபநிஷத்திலும் கூறப்பட்டுளது. அதனை ஹடயோகப் பிரதீபிகையின்டிப்பணியில் எழுதியிருத்தலால் இங்கு எழுதவில்லை.

சுகாசனத்திருந்துகொண்டு ஸ்வசொரூபத்தில் சர்வகாலமு மிருத்தற்றன்மையும் சர்வவஸ்துக்களிலும் உதாசீனமாயிருத்த லும் ஆஸன மெனப்படும். (கூ)

ச. பிராணாயாமம்.

विदुर्बुधारेचकपूरकुम्भसङ्घट्टनश्वासतया प्रयत्नात् ।
प्राणस्थिरत्वं जगताञ्च मिथ्या चित्तं स्थिरं प्राणनिरोधभावः ॥ ७ ॥

ரேசக பூரக கும்பகங்களால் சுவாசத்தைக் குறைக்குந்தன் மையால் பிரயத்தினத்தால் பிராணனது ஸ்திரத்தன்மையும், ஜக மித்தையும், சித்தம் ஸ்திரமாதலும் பிராணநிரோதத்தன்மை யாம். (எ)

ரு. பிரத்தியாகாரம்.

चित्तस्यान्तर्मुखेन प्रतिहतबहुचैतन्यकल्लोलजाल
स्योत्पन्नस्यास्यनानाविपुलमति विकारस्य संसक्तिरेव ।
तत्तन्नानाविकारप्रसतिति तथाकथ्यतेयोगविद्भिः
प्रत्याहारस्सएवाविचलितसुमनास्तंकदाहं भजामि ॥ ८ ॥

சித்தத்திற்கு உட்பார்வையால் தடுக்கப்படும் வெகுசைதன் னியக் கல்லோலக்கூட்டமாயுண்டாகிய இந்த நாநாவிபுல(விரிந்த) மதிவிகாரத்தினது சம்சத்தியே (பற்றே)யுளது. அந்தந்தநாநா விகாரத்தை விழுங்குதல் யோகமுணர்ந்தவர்களால் பிரத்தியாகார மெனப்படும். அதுவே சலிப்பின்றிய நல்லமனதுடையவனாய் அதனை எப்போது யான்பஜிப்பேன்? (அ)

கூ. தியானம்.

सोऽहंभावात् प्रकटितपदमद्वैतमुख्यस्वभावं
यद्यल्लोके स्फुरति खलु तत्तत्स्वरूपस्वभावम् ।
सम्यग्दृष्टिर्गुरुकरुणया सर्वभूतेषु याति
स्वात्मारामस्स भवति सखे ध्यानमार्गैकनिष्ठः ॥ ९ ॥

ஸோஹம்பாவத்தால் வெளிப்பட்டபதமும், அத்வைதமுக்கியஸ்வபாவமுமான எது எது உலகத்தில் விளங்குகின்றதோ, அதது நிச்சயமாக சொரூபசுபாவமாம். அதனை நல்லதிருஷ்டியுடையவன் குருகருணையால் சர்வபூதங்களிலும் அடைகின்றான். நண்பனே! தியானமார்க்கமொன்றில் நிற்பவனாகிய அவன் சுவாத்மாராமனாகின்றான். (கூ)

எ. தாரணை.

स्फुरति परमतत्वं तस्य बाह्यान्तरेयत्
सततममलमत्या धारणं निश्चलेन ।
पुनरपि च वदामस्ते प्रकाशोयमास्ते
चलनरहिताचित्तं केवलं धारणासा ॥ १० ॥

அவனுடைய இடைவிடாத நிச்சலமான அமலமதியினால் உள்ளும் வெளியும் எந்தப் பரமதத்துவம் விளங்குகின்றதோ அது தாரணம். மறுபடியும் உனக்குச் சொல்லுகின்றேன். இது (இப்போது யான்சொல்லுவது) பிரகாசமாயிருக்கிறது. கேவலம் சலனமின்றியசித்தம் எதுவோ அது தாரணையாம். (கo)

அ. ஸமாதி.

सदैकपरिभावनासहजताह्यनायासनात्
समाधिरिति कीर्तितासततनिर्विकल्पात्मता ॥ ११ ॥

நிஜாநுபவசீலத்துவமும், சகலதத்துவ சாம்யத்துவமும், ஸ்மிருதியின் சலிக்கின்றதன்மையின் ஸ்திரத்தன்மையால் நிதித்தியாசத்தன்மையும், அநாயாசமாகச் சத்தொன்றைப் பாவித்தலும், சஹஜத்தன்மையும், எப்போதும் நிர்விகற்பவடிவாயிருத்தலுமாகிய இது ஸமாதியென்று சொல்லப்பட்டது. (கக)

बाह्ये चाभ्यन्तरे ब्रह्म सर्वजन्तुषु भासते ।
तथापि गुरुमज्ञात्वा ते न पश्यन्ति तत्पदम् ॥ १२ ॥

வெளியிலும் உள்ளிலும் சர்வஜந்துக்களிலும் பிரஹ்மம் விளங்குகின்றது. அவ்வாறாயினும் குருவினை அறியாது அவர்கள் தத்பதத்தினை அறிகின்றிலர். (கஉ)

अथ शृणु महाश्चर्यं राजयोगाभिधानकम् ।
इदं सद्गुरुणा याति सज्जनो नान्यकर्मभिः ॥ १३ ॥

இப்போது மகாச்சரியமான இராஜயோகமென்னும் பெயருள்ளதனைக்கேள். சற்சனன் சற்குருவினால் இதனை அடைகின்றான்; வேறுகர்மங்களாலடைகிறதில்லை. (கங)

दुष्कराभ्यासयोगेन महायासेन किं फलम् ।
क्षणेन लभ्यते ब्रह्म सद्गुरोरवलोकनात् ॥ १४ ॥

செய்தற்கரிய அப்யாசயோகத்தினால் மகாஆயாசத்தினால் என்னபிரயோஜனம்? சற்குருவின் பார்வையால் க்ஷணத்தில் பிரஹ்மம் அடையப்படுகின்றது. (கச)

खण्डज्ञानवताञ्च षट्समयसम्मोहान्धकारात्मनां
नानावेदपुराणशास्त्रकविताबाग्वैखरीशालिनाम् ।
मूढानां चतुराश्रमैकनियमात् गर्वात्मकानां कथं
योगज्ञानमिदं भवेद्गुरुमुखाभावेऽपरोक्षात्मकम् ॥ १५ ॥

கண்டஞானமுடையவர்களும், அறுசமயத்து நல்ல மோகாந்தகாரமுடையவர்களும், நாநாவேத புராண சாஸ்திர கவிதையாகிய வைகரிவாக்கியல்புடையவர்களும், மூடர்களும், நான்கு ஆசிரம முக்கியநியமத்தால் கர்வவடிவினருமாகிய அவர்களுக்கு குருமுகமில்லாதபோது இந்த அபரோக்ஷவடிவ யோகஞானம் எவ்வாறு உண்டாகும்? (கரு)

क्षेत्रार्थरम्यगृहपुत्रकलत्रमित्रैः
याद्येमहारसरसायनधातुवादैः ।

तैःकाम मन्त्र लययोग हठादिभेदैः
बद्धात्मनां कथमिहास्ति गुरुप्रसादः ॥ १६ ॥

க்ஷேத்திரம் அர்த்தம் இரம்மியக்கிரகம், புத்திரன், களத்திரம், மித்திரன் என்பனவும். வாதத்தில் மகாரஸ ரஸாயன தாதுவாதங்களும், காமமந்திர லயயோகம் ஹடமுதலியபேதங்களுமாகிய அவற்றால் கட்டுப்பட்டவர்களுக்குக் குருப்பிரசாதம் இங்கு எவ்வாறு இருக்கும்? (கசு)

आदौ वर्णाश्रमाचारगुरौ ब्रह्मज्ञतास्ति चेत् ।
भजेत्तमेव यत्नेन नोचेदन्यं गुरुं भजेत् ॥ १७ ॥

ஆதியில் வர்ணாசிரமாசார குருவினிடத்துப் பிரஹ்மஞானித்தன்மை இருக்குமாயின், அவரையே எத்தினத்தோடு பஜிக்கவேண்டும். இல்லையாயின் வேறுகுருவைப் பஜிக்கவேண்டும். ()

आत्मानमद्वन्द्वमनन्तमाद्यं निरञ्जनं निश्चलनित्यदीप्तम् ।
सच्चिन्मयानन्दपरामृतं यो वेत्ति स्वभावेन गुरुस्स एव ॥ १८ ॥

துவந்துவமில்லாததும், அநந்தமும், முதன்மையானதும், நிரஞ்சனமும், நிச்சலமும், நித்தியப்பிரகாசமும், சச்சின்மயாநந்தபராமிருதமுமான ஆத்மாவை, எவன் இயல்பாக அறிகின்றனே, அவனேகுரு. (கஅ)

ज्ञान वैराग्य लाभेन त्रिणीकृत्य जगत्रयम् ।
आदौ सद्गुरुमाश्रित्य तत्त्वज्ञानं समभ्यसेत् ॥ १९ ॥

ஞான வைராக்கிய லாபத்தால் உலகமூன்றையும் திருணமாக்கிய சற்குருவை ஆதியில் ஆசிரயித்துத் தத்துவஞானத்தினைச் செவ்வையாய் அப்பியசிக்கவேண்டும் (ககூ)

ज्ञातृत्वमन्तरिक्षं च समानो वायुरेव च ।
श्रोत्रमग्निर्ध्वनिर्वारिवाग्भूः खेतत्त्वपञ्चकम् ॥ २० ॥

ஆகாயத்தில், ஆகாயாம்சம் ஞாதிருத்துவம்; வாயுவம்சம் சமானன்; அக்கினியம்சம் சுரோத்திரேந்திரியம்; ஜலாம்சம் துவனி; பூமியம்சம் வாக்கு இவை ஆகாயதத்துவ பஞ்சகம். (௨0)

मनश्चैव वियद्यानो वायुश्चर्म धनञ्जयः ।
स्पर्शोऽभश्च क्षमा पाणिर्मरुतस्तत्त्वपञ्चकम् ॥ २१ ॥

வாயுவில், ஆகாயாம்சம் மனது; வாயுவம்சம்வியானன்; அக்கினியம்சம் துவக்கிந்திரியம்; அப்புவம்சம் ஸ்பரிசம்; பூமியம்சம் பாணி இவை வாயுதத்துவ பஞ்சகம். (௨க)

नभो बुद्धिरुदानश्च मरुदौर्वाग्निमेव च ।
पाथो रूपं धरा पादो वह्नेर्यत्तत्त्वपञ्चकम् ॥ २२ ॥

அக்கினியில், ஆகாயாம்சம் புத்தி; வாயுவம்சம் உதானன; அக்கினியம்சம் நேத்திரம், ஜலாம்சம்ரூபம்; பிருதிவியம்சம் பாதம் இவை அக்கினிதத்துவ பஞ்சகம். (௨௨)

चित्तं विष्णुपदं वायुरपानोरसनानलः ।
रसो जलमुपस्थं भूरपां तत्त्वानि पञ्चकम् ॥ २३ ॥

ஜலத்தில், ஆகாயாம்சம் சித்தம்; வாயுவம்சம் அபானம், அக்கினியம்சம் இரசனை; ஜலாம்சம் இரஸம்; பிருதிவியம்சம் உபஸ்தம் இவை அப்புதத்துவ பஞ்சகம். (௨௩)

अहङ्कारस्तथाप्राणो घ्राणो गन्धो गुदश्चहि ।
भूमितत्त्वानि कीर्त्यन्ते पञ्चधा तत्त्ववेदिभिः ॥ २४ ॥

பிருதிவியில், ஆகாயாம்சம் அகங்காரம்; வாயுவம்சம்பிராணன்; அக்கினியம்சம் கிராணம்; ஜலாம்சம் கந்தம்; பிருதிவியம்சம் குதம் இவை பிருதிவிதத்துவ பஞ்சகம். (௨௪)

पञ्चविंशतितत्त्वानि पञ्चभूतस्थितानि च ।
तानि यो वेत्ति तत्त्वज्ञः स शिवस्सच मुक्तिभाक् ॥ २५ ॥

இருபத்தைந்து தத்துவங்கள் பஞ்சபூதங்களிலிருப்பனவாம். அவற்றை எவனறிகின்றானோ, அவன் தத்துவ முணர்ந்தவன். அவன் சிவன். அவன் முக்தியடைந்தவன். (உரு)

अध्यात्मिकाधिभूताधिदैवतानि यथाक्रमम् ।
जीवेन्द्रियेषु विभजन् जीवान्तःकरणेषु च ॥ २६ ॥

அத்தியாத்மிகாதிபூதாதி தைவதங்களைக் கிரமப்படி ஜீவேந்திரியங்களிலும் ஜீவாந்தக்கரணங்களிலும் விபாகித்துக் கொடுத்து. (உசு)

नाहं भूतगुणेन्द्रियाणि च मनोहं चित्तबुद्धिर्वपुः
प्राणाश्रमधर्मकर्मनिरतो नैव प्रपञ्चोऽखिलम् ।
नित्यं निश्चलमेकमच्युतमजं शान्तं शिवं निर्गुणं
शुद्धं बुद्धं वदन्ति यत्तदहमस्मीति स्मरन् जीवति ॥ २७ ॥

யான் பூதகுணேந்திரியங்களல்லன்; மனம் புத்தி சித்தமல்லன்; சரீரமல்லன், பிராணனல்லன்; ஆசிரமதர்மகர்ம நிரதனல்லன். சகலப் பிரபஞ்சமுமல்லன், நித்தியமும், நிச்சலமும், ஏகமும், அச்சுதமும், அஜமும், சாந்தமும், சிவமும், நிர்க்குணமும், சுத்தமும், புத்தமுமாக எதனைக் கூறுகின்றனரோ அது யானென்று ஸ்மரித்து ஜீவிக்கின்றான். (உஎ)

देहत्रये प्रथितषोडशधाविकारान्
लिङ्गानिसप्तदशधा नवधा पदार्थान् ।
आत्मानमष्टविधया प्रकृतेःस्वभावान्
ज्ञात्वा तदन्य इति जीवति यो महात्मा ॥ २८ ॥

தேகமூன்றில் சொல்லப்பட்ட பதினாறுவகை விகாரங்களையும், பதினேழுவகை லிங்கங்களையும், ஒன்பது வகைப் பதார்த்தங்களையும், ஆத்மாவையும், எட்டுவிதமாகப் பிரகிருதியின் ஸ்வபாவங்களையும் அறிந்து, அவற்றின்வேறானவன் (யான்) என்று எவன் ஜீவிக்கின்றானோ, அவன் மகாத்மா. (உஅ)

सत्यं ज्ञानमनन्तं यत् ब्रह्मेति वदति श्रुतिः ।
मुक्तानन्दस्वरूपञ्च ननु तत्त्वमसि स्थितः ॥ २९ ॥

சத்தியம் ஞானம் அநந்தம் முக்தாநந்த சொரூபம் எந்தப் பிரஹ்மமோ அது நீயாக நிலைத்திருக்கின்றாய் என்று வேதம் கூறுகின்றது. (உகூ)

नैतदहं नैतदहं चेति च यदन्यद्विभावयात्मानम् ।
सोहमिति सोहमिति ननु भावय सर्वं त्वमात्मानम् ॥ ३० ॥

இது யானல்ல இது யானல்லவென்று எது வேறாகவுளதோ அவ்வாத்மாவைப்பாவி அது யான் அது யான் என்று எல்லாவற்றையும் நீ ஆத்மாவாகப்பாவி. (௩0)

हृदि ज्ञानादेवमोक्ष इत्येतद्वाक्यमादरात् ।
गृहीत्वाज्ञानयोगेऽस्मिन् समाहितमनाभव ॥ ३१ ॥

இருதயத்தில் ஞானத்தினாலேயே மோக்ஷமென்னும் இவ்வாக்கியத்தை ஆதாவோடு கிரகித்து, இந்த ஞானயோகத்தில் சமாதியடைந்த (ஒருமைப்பட்ட) மனதுடையவனாவாய். (௩க)

தாரகயோகம்.

अतः परंतारकं गुह्यं दृष्टप्रत्ययसंयुतम् ।
ममानुभवसंसिद्धं योगं प्राणसखे शृणु ॥ ३२ ॥

பிராண நண்பனே! இனிமேல் காணப்பட்ட பிரத்தியயத்தோடு கூடியதும் எனது அநுபவசித்தமும் இரகசியமுமான தாரகயோகத்தினைக் கேட்பாயாக. (௩உ)

मन्त्रेण लययोगेन हठयोगेन सर्वदा ।
यावद्ब्रह्म न जानन्ति तावत् क्लिश्यन्ति पण्डिताः ॥ ३३ ॥

மந்திர யோகத்திலும் இலயயோகத்திலும் ஹடயோகத்திலும் எப்போதும் எதுவரையில் பிரஹ்மத்தை யறியவில்லையோ அதுவரையில் பண்டிதர்கள் கிலேசிக்கின்றனர். (௩௩)

नेत्रेनिमीलिते नित्यं किञ्चिदुन्मीलिते तदा ।
यो मनश्चक्षुषा ब्रह्म पश्यतीति सयोगिराट् ॥ ३४ ॥

நித்தியமும் நேத்திரமிரண்டும் திறந்து சிறிது மூடியிருக்கின், அப்போது எவன் மனக்கண்ணால் பிரஹ்மத்தையறிகின்றானோ அவன் யோகிராஜன். (௩௪)

शशिभास्करयोर्मध्ये तारयोस्स्थिरतेजसः ।
बिन्दुद्वयञ्च संयोज्य ब्रह्मतारकमभ्यसेत् ॥ ३५ ॥

சந்திர சூரியர்களின் மத்தியில் தாரமிரண்டன் ஸ்திர தேஜஸையும் விந்துவிரண்டையும் செவ்வையாய்ச் சேர்த்துப் பிரஹ்ம தாரகத்தினை அப்பியசிக்கவேண்டும். (௩௫)

லக்ஷியத்திரயம்.

बाह्यान्तर्मध्यलक्ष्येषु ब्रह्मदर्शनतत्परः ।
दृष्टादृष्टस्वरूपाणि ननु तानि विलोकय ॥ ३६ ॥

பாகியாந்தர மத்தியலக்ஷியங்களில் பிரஹ்மதரிசன தற்பரனாய் திருஷ்டா திருஷ்ட ஸ்வரூபங்களாகிய அவற்றைப் பார். (௩௬)

ஆந்தரலக்ஷியம்.

मूलकन्दाद्दण्डलग्नात् ब्रह्मनाडीशशिप्रभा ।
तस्य मध्येतटित्कोटिनिभा तामूर्ध्वगामिनीम् ॥ ३७ ॥

मनसा लक्षयेन्मूर्तिं सदृशीं विसतन्तुना ।
आब्रह्मरन्ध्रपर्यन्तगतां सिद्धिप्रदां स्मरेत् ॥ ३८ ॥

மூலகந்தமுதல் வீணாதண்டத்தைப்பற்றியதாய்ச் சந்திரப் பிரபையொத்த பிரஹ்மநாடியுளது அதன மத்தியில் கோடிமின் னலையொத்ததும், மேற்செல்லுவதும் தாமரைநூலை யொத்தது மான அந்த மூர்த்தியினை மனதினால் இலக்ஷியிக்க வேண்டும். பிரஹ்மரந்திர பரியந்தம் சென்றதாய்ச் சித்தியைத் தருவதாகச் சிந்திக்கவேண்டும் (௩௭)

ललाटोर्ध्वे तथा लक्ष्ये योगी गोल्लाटमण्डपे ।
विस्फुरत्तारकाकारं मनसा लक्षयेत् सदा ॥ ३९ ॥

அவ்வாறே யோகிலலாடத்தின் மேலிடத்தில் * கோல்லாட மண்டபமாகிய லக்ஷியத்தில் பிரகாசிக்கின்ற தாரகவடிவத்தினை எப்போதும் மனதினால் இலக்ஷியிக்கவேண்டும். (௩௮)

अथवा कर्णयोर्द्वारे तर्जनीभ्यां निरोधयेत् ।
श्रीहट्टमस्तके नादं घुंघुंकारं शृणोति च ॥ ४० ॥

அல்லது செவித்துளையிரண்டனையும் சுட்டு விரல்களால் அடைக்கவேண்டும். ஸ்ரீஹட்டமஸ்தகத்தில் கும் (घुं) கும் (घुं) என்னும் வடிவினதாகிய நாதம் கேட்கின்றது. (௩௯)

चक्षुर्मध्ये तथानीलज्योतिरूपं विलोकयेत् ।
अन्तर्लक्ष्यमिति ज्ञेयं बहिर्लक्ष्यमथ शृणु ॥ ४१ ॥

விழியின் நடுவில் அவ்வாறே நீலஜோதிவடிவத்தினைப்பார் அந்தர் (உள்) லக்ஷியம் இவ்வாறு அறியத்தக்கதாம். இனி பகிர் (வெளி) லக்ஷியத்தினைக் கேள். (௪௦)

नासाग्रदेशाच्चतुरः षष्ट तथा दश द्वादश संख्ययांगुलिः ।
बहिस्थनीलंच सुधूम्र रक्ततरङ्ग पीताद्भुत तत्वपञ्चकम् ॥ ४२ ॥

---

* நெற்றிக்கு மேல் சிரசுக்குக் கீழுள்ள ஸ்தானத்தை கோல்லாட மண்டபமென்பது யோகபரிபாஷை.

நாசி நுனியிடத்தினின்றும் நான்கு ஆறு எட்டு பத்து பன்னிரண்டங்குலம் வெளியிலிருக்கும் நீலமும், நல்ல புகைமை, செம்மை, அலைபோன்ற வெண்மை, பசுமை, என்னும் வர்ணமுள்ள அற்புதமான தத்துவ பஞ்சகத்தினைப் பார்க்கவேண்டும் (சஉ)

अथवा सन्मुखाकाशं चलदृष्ट्या विलोकयेत् ।
ज्योतिर्मयूखाः दृश्यन्ते योगिभिर्धीरमानसैः ॥ ४३ ॥

அல்லது எதிர்முக ஆகாசத்தினையாவது * சலதிருஷ்டி (அசைவுடைய பார்வை)யால் பார்க்கவேண்டும். தீரமனதுடைய யோகிகளால் ஜோதி கிரணங்கள் பார்க்கப்படுகின்றன. (சங)

दृष्ट्यग्रे वाप्यपांगे वा तप्तकांचनसन्निभाम् ।
भूमिं संलक्षयेद्दृष्टिः स्थिरा भवति योगिनः ॥ ४४ ॥

கண்முன்னாவது கடைக்கண்ணிலாவது உருக்கியபொன்னையொத்த பூமியினை இலக்ஷிக்கவேண்டும். யோகியின் திருஷ்டி ஸ்திரமாகின்றது. (சச)

अथवा शिरसश्चोर्ध्वे द्वादशांगुलसम्मिते ।
ज्योतिः पुञ्जं निराकारं लक्षयेन्मुक्तिदं भवेत् ॥ ४५ ॥

அல்லது சிரசின்மேலிடத்தில் பன்னிரண்டங்குலவளவில் நிராகாரமான ஜோதிக்கூட்டத்தினை அலக்ஷிக்கக்கடவன். அது முக்தியைத் தருவதாகின்றது. (சரு)

यत्र यत्रार्थवान् योगी तत्र तत्र विलक्षयेत् ।
आकाशमेव यत्तस्य चित्तं भवति तादृशम् ॥ ४६ ॥

---

* சலதிருஷ்டியென்றே உபநிஷத்துக்களில் பாடமுளது. அதுவே அநுபவத்திற்கும் ஒத்ததாம்.

எங்கெங்கு யோகி அர்த்தமுடையவனுகின்றுனே அங்கங்கு ஆகாயத்தினையே இலக்ஷியஞ் செய்யவேண்டும். அவனுடைய சித்தம் எதுவோ அது அத்தன்மையதாகின்றது. (சகூ)

इत्येकं विविधाकारं बहिर्लक्ष्यमुदीरितम् ।
शृणुष्वमध्यलक्ष्यं च कथितं पूर्वसूरिभिः ॥ ४७ ॥

இப்படி நாநாவிதமான பகிர்லக்ஷியமொன்று சொல்லப்பட்டது. பூர்வஞானிகளால் சொல்லப்பட்ட மத்திய லக்ஷியத்தினைக் கேள். (சஎ)

மத்தியலக்ஷியம்.

श्वेतादिवर्ण नवखण्ड सुचन्द्रसूर्य सौदामिनीवह्निशिखेनबिम्बात् ।
ज्वलन्नभो वा स्थलहीनमेकं विलक्षयेत्तत्खलुमद्धचलक्ष्यम् ॥ ४८ ॥

வெண்மை முதலிய வர்ணங்களுள்ளதும், இளந்துண்டப் பிறை, சூரியன், மின்னல், அக்கினிசிகை யென்பவற்றுல் பிம்பத்தினின்றும் ஜவலிக்கின்ற ஆகாயத்தினை அல்லது ஸ்தல (இட) மின்றிய வொன்றனை இலக்ஷயிக்கவேண்டும். அது நிச்சயமாக மத்தியலக்ஷியமாம். (சஅ)

निराकारं पश्येद्गुणरहितमाकाशमथवा
तमोरूपं गाढं स्फुरद्रूपमाकाशमथवा ।
महाकाशज्वालानलनिभमथाप्यन्तरुचिरं
तथातत्वाकाशं रविशतनिभं सूर्यखमिति ॥ ४९ ॥

व्योमपञ्चकमेतद्धि तद्बाह्याभ्यन्तरस्थितम् ।
यः पश्यति नरो लक्ष्ये सव्योमसदृशोभवेत् ॥ ५० ॥

க நிராகாரமும் குணமின்றியதுமான ஆகாயம், அல்லது

உ. † காடமான இருள்வடிவமாய் விளங்கும் வடிவினதாகிய ஆகாயம், அல்லது ௩. காலாக்கினி போன்ற மகாகாயம், அல்லது ச. அத்தியந்தமினிய தத்துவாகாயம், ரு. நூறு சூரியன் போன்ற சூரியாகாயமென்னும் இவை * ஆகாய பஞ்சகமாம். வெளியிலும் உள்ளிலுமிருக்கும் அதனை எந்த நரன் இலக்ஷியத்தில் பார்க்கின்றானோ அவன் ஆகாயத்தை யொத்தவனாகின்றான். (சக—ரு0)

तारणाच्च गुरुशिष्ययोर्द्वयोस्तारकोयमितियोगसञ्ज्ञिकः
तारकं भवमहाब्धितारकं तत्त्वमेव परिशीलनं कुरु ॥ ५१ ॥

குரு சிஷயர்களிருவரையும் தாரணஞ் செய்தலால் இது தாரகமென்று யோகப்பெயருடையதாம். பவப்பெருங் கடலைக் கடப்பிக்கும் தாரகதத்துவத்தினையே பரிசீலன அப்பியாசஞ் செய். (ருக)

फलमेकं द्विधाचार्यं यथार्थंसाङ्ख्यतारयोः
उपाधिरहितस्साङ्ख्यो योगस्सोपाधिकस्स्वयम् ॥ ५२ ॥

சாங்கியதாரகமிரண்டற்கும் யதார்த்த பலமொன்று ஆசரிக்கத்தக்கது இரண்டுவகை உபாதியின்றியது சாங்கியம் சுவயம் உபாதியோடு கூடியது (தாரக) யோகம். (ருஉ)

इति श्रीसदाशिवयोगीन्द्रविरचितायां शिवयोगदीपिकायां चतुर्थः पटलः ॥

இவ்வாறு ஸ்ரீ சதாசிவ யோகீந்திரராற் செய்யப்பட்ட

சிவயோக தீபிகையில்

நான்காம்படலம்

முடிந்தது.

---

† விளங்கும் தாரகவடிவமாய்ச் செவ்வையாய்ப் பிரகாசிக்கும் காடதமம் போன்ற பரமாகாயம் என்று உபநிஷதங்களில் கூறப்பட்டுளது.

* இவ்வாகாய பஞ்சகத்தினை அத்வயதாரகோபநிஷத்திலும் மண்டலப்பிராஹ்மணோபநிஷத்திலும் கூறப்பட்டுளது.

## —अथ पञ्चमः पटलः—

## ஐந்தாம் படலம்.

पुनश्चातिरहस्यं यज्जयोतिषां निलयं महत् ।
दिव्यलिङ्गस्थलं दृष्टं अन्तर्लक्ष्यात्मकं शृणु ॥ १ ॥

மறுபடியும் அதிரகசியமும், ஜோதிகளுக்கு நிலய (இருப்பிட) மும், மகத்தும், திருஷ்டமும், திவ்வியலிங்கஸ்தலமும், அந்தர்லக்ஷியவடிவினதும் எதுவோ அதனைக்கேள். (க)

नान्तस्थलं बहिर्व्याप्तं अपरोक्षस्वरूपकम् ।
आकाशाभ्यन्तराकाशं अन्तर्लक्ष्यन्तदेव हि ॥ २ ॥

உள் ஸ்தலமன்று வெளியில் வியாபித்ததன்று அபரோக்ஷ சொரூபமும் ஆகாயத்தினுள்ளாகாசமுமான அதுவே அந்தர் லக்ஷியமாம். (உ)

लक्ष्यलीनमनसानिलेन यो वर्ततेऽचलितता‌रयोर्भवेत् ।
खेचरीयमथसैव शाम्भवी मुद्रयास्तु कृतया जगद्गुरुः ॥ ३ ॥

இலக்ஷியத்தில் இலயமான வாயுவோடும் மனதோடும் எவனிருக்கின்றானோ அவன் சலியாத தாரமிரண்டனையுமுடையவனாகின்றான். இது கேசரி, அதுவே சாம்பவி முத்திரையின் கிருபையால் ஜகத்குருவாகின்றான். (ங)

लोकेऽन्तःखेचरी मुद्रा अज्ञात्वाबाह्यखेचरीम् ।
अवलम्बनता केचित् जिह्वाच्छेदेन कर्मणा ॥ ४ ॥

உலகத்தில் உள்கேசரி முத்திரையினை அறியாது பாகிய கேசரியைச் சிலர் நாவினைச் சேதிக்கும் கர்மத்தினால் அவலம்பிக்கின்றனர். (ச)

तालुमूलद्वादशान्तमध्यं प्रत्यक्कलात्मकम् ।
यत्तस्मिन् ज्योतिषिमनो दत्वा निजहृदि क्रमात् ॥ ५ ॥

தாலுமூல (அண்ணவடி) துவாத சாந்த மத்தியில் பிரத்தியக்கலைவடிவினது எதுவோ அந்த ஜோதிஷாகிய நிஜஹிருதயத்தில் கிரமமாக மனதைக்கொடுத்து. (௫)

दृष्टिस्तु पूर्णिमा ज्ञेयं दृश्यमादौ तमोमयम् ।
तन्मध्ये मनसा पश्येत् ज्योतिर्लिंगं सुनिश्चलम् ॥ ६ ॥

திருஷ்டியோ * பூர்ணிமையென்று அறியத்தக்கதாம். முதலில் தமோமயமான திருசியம் பார்க்கத் தக்கதாம். அதன் மத்தியில் நல்ல நிச்சலமான ஜோதிர்லிங்கத்தினை மனதினுற் காண்க. (௬)

नासाग्रदत्तनिमिषोन्मिषबाह्यदृष्ट्या
लक्ष्ये सदाशिवविदर्शक गूढदृष्ट्या ।
ज्योतिस्वरूपमचलं परिणामहीनम्
पश्यन्ति ये त इह संयमिनः कृतार्थाः ॥ ७ ॥

நாசிநுனியில் கொடுக்கப்பட்ட விழித்தல் மூடுதல் வடிவபாகிய திருஷ்டியாகிய சதாசிவத்தினைக்காட்டும் கூடதிருஷ்டியினுல், எவர்கள் அசலமும் பரிணுமமின்றியதுமான ஜோதி

---

* "அதன் தர்சனத்தில் அமா, பிரதிபத், பூர்ணிமா என்று மூன்று திருஷ்டிகள் உண்டு.

௧. கண் மூடி திறந்துப்பார்த்தல் அமா.

௨. பாதிவிழித்துப்பார்த்தல் பிரதிபத்.

௩. முற்றும் விழித்துப்பார்த்தல் பூர்ணிமா." என்று மண்டலப்பிராஹ்மணேபநிஷத்தில் கூறப்பட்டுளது. அப்பூர்ணிமையே இச்சுலோகத்துக் கூறப்பட்டுளது. இதன் முன் அமாவும் பின் பிரதிபத் என்பதும் கூறியிருத்தல் காண்க.

சொரூபத்தினை இலக்ஷியத்தில் காண்கின்றார்களோ அவர்கள் இங்கு யோகமுடைய கிருதார்த்தராவர். (எ)

पश्चिमाभिमुखं लिंगं अभिन्नवलयाकृतिम् ।
त्वं पूर्वाभिमुखो भूत्वापश्य पश्य महाद्भुतम् ॥ ८ ॥

அபின்னவளையவடிவினதும், மேற்கு முகமானதுமான மகாற்புதலிங்கத்தினை நீ கிழக்கு நோக்கியவனாகிப் பார்! பார்! (அ)

यदातज्ज्योतिरोंकारं ब्रह्मविष्णुशिवात्मकम् ।
पश्यन्ति सूरयश्शान्तं तद्विष्णोः परमं पदम् ॥ ९ ॥

அறிஞர் எப்போது பிரஹ்ம விஷ்ணு சிவவடிவ ஓங்காரமாகிய அந்த ஜோதியினைப் பார்க்கின்றார்களோ அப்போது அது சாந்தமான விஷ்ணுவின் பரமபதமாம். (கூ)

पूर्णेन्दुबिम्ब इव सन्मणिदीपिकेव
मध्याह्नसूर्य इव वह्निशिखेव नित्यम् ।
विद्युत्प्रभेव शिवलिङ्गमहो विचित्रं
लक्ष्यान्तरे ज्वलति पश्यति चक्षुरग्रे ॥ १० ॥

பூரணசந்திரபிம்பம்போலவும், இரத்தினதீபம்போலவும், மத்தியான சூரியன்போலவும், நித்தியம் அக்கினி சிகையினைப் போலவும், மின்னற் பிரபைபோலவும் அகோ! விசித்திரமான சிவலிங்கம் இலக்ஷியாந்தரத்தில் பிரகாசிக்கின்றது. அதனைக் கண்முன் பார்க்கின்றான். (க0)

आत्मलिङ्गमिदं पश्य किमन्यैः कर्मविभ्रमैः ।
अहिंसाद्यष्टपुष्पैस्तु मानसे लिङ्गपूजया ॥ ११ ॥

அஹிம்சை முதலிய அஷ்டபுஷ்பங்களால் மானதத்தில் லிங்க பூஜையினால் ஆத்மலிங்கமாகிய இதனைப்பார். அந்நிய கர்ம மயக்கங்களால் என்னபயன்? (கக)

पुष्पाण्यहिंसेन्द्रियनिग्रहश्च दयाक्षमाज्ञानसमाह्वयानि ।
ध्यानंतपस्सत्यममूभिरेवं प्रपूजयेदात्मनिसिद्धलिङ्गम् ॥ १२ ॥

புஷ்பங்களாவன :—௧. அஹிம்ஸை, ௨. இந்திரிய நிக்கிரகம், ௩. தயை, ௪. க்ஷமை, ௫. ஞானம், ௬. தியானம், ௭ தவசு, ௮. சத்தியம் என்பன. இவற்றால் இவ்வாறு ஆத்மாவில் சித்தலிங்கத்தினைப் பூஜிக்கவேண்டும். (௧௨)

योनिमीलदनिमीलदम्बको रेकपूरपरिवर्जितानिलः ।
सर्वसंशयविभिन्नमानसः राजयोगपदभाक् स एव हि ॥ १३ ॥

எவன் அரைவிழித்த பார்வை யினனும், ரேசகபூரக மின்றியவாயுவு (கேவலகும்பகமு) டையவனும் சர்வசம்சய மொழிந்த மனதுடையவனுமா யிருக்கின்றானோ அவனே இராஜயோக பதத்தை யடைந்தவனாவன். (௧௩)

शृंगाटकेयस्तु मनो नियम्य त्रिकोणगामीशशिभास्कराभ्यां ।
बाह्यान्तरङ्गप्रवणैकगोभिः अष्टावधानीहठराजयोगी ॥ १४ ॥

சிருங்காடகத்தில் (நாற் சந்தியில்) எவன் மனதை நிறுத்தி, திரிகோணத்திருக்கும் ஈசனைச் சந்திர சூரியர்களால் வெளியுள் வணக்கங்களால் பூஜிக்கின்றானோ அவன் அஷ்டாவதானியான ஹடராஜயோகியாகின்றான். (௧௪)

दृग्दृश्यमानसम्बन्धात् उन्मन्यन्तंविचिन्तयेत् ।
शिवयोगमिदंगुह्यंजीवन्मुक्तिकरंमुने ॥ १५ ॥

திருக்குத்திருசியமான சம்பந்தத்தினால் உன்மனிவரை சிந்திக்கவேண்டும். இச்சிவயோகம் இரகசியமானதாம்; முநியே! ஜீவன் முக்தியினைத் தருவதாம். (௧௫)

रोचिस्तटिद्धूम्रकबिन्दुनादकलामखद्योतरवीन्दुदीपाः ।
तत्प्रत्ययानेकसुवर्णकञ्जकिञ्जल्कदण्डा नवरत्नमुख्याः ॥ १६ ॥

பிரகாம், மின்னல், புகைமை, விந்து, நாதம், கலை, நக்ஷத்திரம், மின்மினி, சூரியன், சந்திரன், தீபம், அந்தப்பிரத்தியய அநேக பொற்றாமரைக் கேசரதண்டங்கள் நவரத்தின முதலியவைகள் பிரகாசங்கள். (௧௬)

वक्त्रेचापूर्यवायुं हुतवहनिलयेऽपानमाकृष्यमुद्रां
स्वांगुष्ठाद्यंगुलीभिस्वकरतलयोष्षड्भिरेवंनिरुध्य ।
श्रोत्रे नेत्रेच नासापुटयुगलमथानेन मार्गेणधीराः
पश्यन्ति प्रत्ययांस्तान् प्रणववहुविधध्यानसंलीनचित्ताः ॥ १७ ॥

வாயுவினால் வாயுவை வயிற்றில் நிரப்பி அபானனை இழுத்து முத்திரையினைத் தன் கைப்பெருவிரல் முதலிய விரல்களாகிய இருகைவிரல்களாறினாலும் இருசெவித்துளைகள், இரண்டு கண்கள், நாசித்துவாரமிரண்டு என்பவற்றை யடைத்து, இவ்வழியாகத் தீரர்கள் பிரணவ வெகுவிதத் தியானத்தினால் ஒடுங்கிய சித்தத்தினராய் அந்தப் பிரத்தியயங்களைப் பார்க்கின்றனர். (௧௭)

दृष्टिर्वा रविसोमपावकयुता चन्द्रार्कयोरागमे
दीप्तानिश्चलगेहदीपनिकटे वानिर्मितीनामपि ।
दृश्यन्ते स्फुरितास्फुटा नयनयोरग्रेच तत्प्रत्ययाः
तेषां तत्परचेतसां विगलिता तद्वद्याकृतीनां मुने ॥ १८ ॥

அல்லது சூரியசந்திரவக்கினியுடையவர்களது திருஷ்டியும், சந்திர சூரியர்களது வரவில் பிரகாசிப்பனவும், அல்லது அசைவின்றிய வீட்டு விளக்கினருகிலும், கண்களிரண்டன் முன் அசைகின்ற தெளிவான பிகாசங்களும் காணப்படுகின்றன. அவை பிரத்தியயங்களாம். அதன் வேறுபட்ட தற்பரசித்தமுடைய அவர்களுக்கு அப்பிரத்தியயங்கள் கரைந்தனவாம். (௧௮)

प्रमाणप्रत्ययातीतं शान्तं तेजोमयात्मकम् ।
तदतीतं परब्रह्मचेति विद्वद्भिरीरितम् ॥ १९ ॥

பிரமாணப் பிரத்தியயங்களுக் கப்பாற் பட்டதும், சாந்தமும் தேஜோமய வடிவினதும், அதன் அதீதமும், பரப்பிரஹ்மமென்று வித்வான்களால் சொல்லப்பட்டுளது. (கசு)

भावयोगमसङ्कल्पाविकल्पास्पदमद्भुतम् ।
संप्राप्तोयस्तस्य भवेदत्रस्था चोन्मनीहि सा ॥ २० ॥

சங்கற்ப விகற்பத்திற்கு விஷயமாகாததும், அற்புதமுமான பாவயோகத்தினை எவன் பெற்றிருக்கின்றானோ, அவனது விருத்தி இங்குள்ளதாயினும் அது உன்மனியே ஆகின்றது. (உ0)

आधारमध्यहृद्व्याप्तं नादबिन्दुकलात्मकम् ।
तदतीतं स्वरूपंयत्तदेव परमं पदम् ॥ २१ ॥

ஆதாரமத்திய ஹிருதயவியாப்தமும், நாத விந்து கலைவடிவினதும், அதனதீதமுமான சொரூபம் எதுவோ அதுவே பரமம் பதமாம். (உக)

यस्समेति मनसा निराश्रमं निरवलम्बपदतत्त्वमव्ययम् ।
भावनाविरहितं निरामयं परशिवं हृदि स तन्मयो भवेत् ॥ २२ ॥

எவன் மனதினால் நிராசிரயமும், நிரவலம்ப பததத்துவமும், அவ்வியயமும், பாவனையின்றியதும், நிராமயமுமான, பரசிவத்தினை இருதயத்தில் செவ்வையாயடைகின்றானோ அவன் தன்மயனாகின்றான். (உஉ)

अणुमात्रं यदि भवेदस्तित्वं विदुषां भुवि ।
तदेवबन्धहेतुस्याद्भावाभावावुभौ त्यजेत् ॥ २३ ॥

புவியில் அறிஞருக்கு இருக்கிறதென்னுந்தன்மை அணுமாத்திரமாவது இருக்குமாயின், அதுவே பந்த ஹேதுவாகின்றது. ஆதலால் பாவாபாவமிரண்டனையும் விடவேண்டும். (உங)

ज्ञानज्ञेयौ ध्यानध्येयौ लक्ष्यालक्ष्ये भवाभवौ ।
ऊहापोहौ यो दृग्दृश्य ये सर्वं त्यक्त्वा जीवन्मुक्तः ॥ २४ ॥

ஞானம் ஞேயம், தியானம் தியேயம், இலக்ஷியம் அலக்ஷியம், இருப்பு இன்மை, ஊகம் ஊகமின்மை, திருக்கு திருசியமென்னும் எல்லாவற்றையும் எவன் விடுகின்றானோ அவன் ஜீவன் முக்தனாகின்றான். (௨௪)

सर्वास्ववस्थास्वकृतप्रयत्नः निश्चिन्तभावो मृतवत्सतिष्ठन् ।
कल्लोलहीनांबुधिवन्निवात प्रदीपवत्तत्वमयस्सुखीस्यात् ॥ २५ ॥

எல்லா அவஸ்தைகளிலும் முயற்சிசெய்யாதவனாய் சிந்தையற்ற தன்மையனாய் மரித்தவனைப்போலிருந்துகொண்டு அலையற்ற சமுத்திரம்போலும் வாயுவில்லாத தீபம்போலும் தத்துவமயனாய்ச் சுகியாகின்றான். (௨௫)

ஞான சிவபூஜை.

शृणु चिच्छिवपूजायाः प्रकारं कथयाम्यहम् ।
रहस्यं सर्वशास्त्रार्थसारं सद्यो विमुक्तिदम् ॥ २६ ॥

சிற் சிவபூஜையின் றன்மையைச் சொல்லுகிறேன் கேள் இது இரகசியமும், சர்வசாஸ்திரார்த்தசாரமும், உடனே முக்தியைத் தருவதுமாம். (௨௬)

निश्चिन्तैव शिवध्यानं निष्क्रिया तस्य पूजनम् ।
प्रदक्षिणं निश्चलत्वं सोहंभावो नमस्क्रिया ॥ २७ ॥

मौनं सङ्कीर्तनं तस्य जपस्तु परिपूर्णता ।
कृत्याकृत्यज्ञताशीलं निर्वाणं समदर्शनम् ॥ २८ ॥

* சிந்தையின்மையே சிவத்தியானம், கிரியையின்மையே அதன் பூஜனம், நிச்சலத்தன்மை பிரதக்ஷிணம், ஸோஹம்பாவம் நமஸ்காரம், மௌனம் சங்கீர்த்தனம், பரிபூரணத்தன்மை அதன் ஜபம், கிருத்தியாகிருத்தியத்தினை அறியுந்தன்மை சீலம், சமதரிசனம் நிர்வாணம். (உஎ—உஅ)

सर्वेन्द्रियगुणरहिता रूपातीता निरञ्जना शांता ।
भावाभावविदूरा सहजावस्थे ति साकथिता ॥ २९ ॥

சர்வேந்திரிய குணங்களின்றியதும், ரூபாதீதமும், நிரஞ்சனமும், சாந்தமும், பாவாபாவங்களினின்று விலகியதுமாகிய அது ஸஹஜாவஸ்தை யென்று சொல்லப்படுகின்றது. (உகூ)

जाग्रत्स्वप्नसुषुप्तिश्च तुरीयं च तथैवच ।
तुर्यातीतं च सहजं न किंचिच्चिन्तयेत्ततः ॥ ३० ॥

அதனால் ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், அவ்வாறே துரியாதீதம், ஸஹஜமென்பவற்றைச் சிறிதும் சிந்திக்கலாகாது. (௩0)

विहायकर्माण्यघसंयुतानि गृह्णाति कर्माणि शुभान्वितानि ।
स्वर्गोन्मुखो यः पुरुषः प्रवृत्तः नैवाधिकारीसतुजागरेऽपि ॥ ३१ ॥

எப்புருஷன் பாபத்தோடு கூடிய கர்மங்களைவிட்டுப் புண்ணியத்தோடு கூடிய கர்மங்களைச்செய்கின்றானோ, ஸ்வர்க்கத்தை

---

* "சிந்தையின்மை அதன் (பிரஹ்மத்தின்) தியானம். சர்வகர்ம நிராகரணம் ஆசனம். உன்மனீபாவம் பாத்தியம். எப்போதும் அமனஸ்கம் அர்க்கியம். எப்போதும் பிரகாசமான அபராமிருதவிருத்தி ஸ்நாநம். சர்வாத்மபாவனை கந்தம். திருக்குஸ்வரூபமாக நிலைத்தல் அக்ஷதைகள். சித்தின் அடைவு புஷ்பம். சிதா (ஞான)க்கினிஸ்வரூபம் தூபம். சிதாத்திய ஸ்வரூபம். தீபம். பரிபூர்ண சந்திராமிருதத்தினை ஒன்றுபடுத்தல் நைவேத்தியம். நிச்சலத்தன்மை பிரதக்ஷிணம். ஸோஹம் பாவம் நமஸ்காரம். மௌனம் ஸ்துதி. ஸர்வ சந்தோஷம் விஸர்ஜனம்." என்று இவ்வாறு ஞானபூஜை மண்டலப் பிராஹ்மணோபநிஷத்திற் கூறப்பட்டுளது.

நோக்கிய பிரவிருத்தனாகின்றானே, அவன் ஜாக்கிரத்திலும் அதி காரியல்லன். (௩௧)

अलमलमखिलसुखैकपदश्चेति कदाचिन्निवर्तमानः ।
स तु जाग्रदवस्थायां तिष्ठन् मोक्षोन्मुखो भवति ॥ ३२ ॥

சகல சுக முக்கிய பதம் போதும் போதுமென்று ஒரு காலத்து நீங்குகின்றவனாகிய அவன் ஜாக்கிராவஸ்தையிலிருப்பவனாய் மோக்ஷநோக்கமுடையவனாகின்றான். (௩௨)

संसारोत्तरणं ममास्ति कथमित्याचार्यसंसेवनं
विद्वत्सङ्गमकामः स्मृतिसदाचारैस्समं मौनताम् ।
वैराग्यश्रुतिशास्त्रनिश्चयधिया कामाद्यरिध्वंसनम्
योगाभ्यासमुपैति डम्भरहितं जाग्रत्स्वभावान्वितः ॥ ३३ ॥

சம்சாரத்தினின்றும் கரையேறுதல் எனக்கு எவ்வாறுளதாமெனின் ஆசாரியனைச் சேவித்தலையும், வித்துவான்களது சங்கமத்தை விரும்பியவனாய் ஸ்மிருதி சதாசாரங்களோடு சமமான மௌனத்தன்மையையும், வைராக்கிய சுருதி சாஸ்திர நிச்சய புத்தியினால் காமாதி பகைவரின் நாசத்தையும், டம்பமின்றிய யோகாப்பியாசத்தினையும் ஜாக்கிர ஸ்வபாவத்தோடு கூடியவன் செவ்வையாயடைகின்றான். (௩௩)

मृतो जाग्रदवस्थासु यदि चेदन्यजन्मनि ।
स्वप्नावस्थां गतो याति पूर्वाभ्यासवशाद्भुवि ॥ ३४ ॥

ஜாக்கிராவஸ்தைகளில் இறந்தானாயின், அந்நிய ஜன்மத்தில் புவியில் பூர்வாப்பியாசவசத்தால் சொப்பனாவஸ்தையிற் சென்றவனாய் அடைகின்றான். (௩௪)

स्वप्नेयदखिलंलोकं पश्यन् शरदभ्ररूप इव चित्ते ।
तिष्ठन् सत्तामात्रस्स्वप्नावस्थान्वितश्चरति ॥ ३५ ॥

சொப்பனத்தில் சகல லோகத்தையும் சரற்காலத்து மேகம் போற் சித்தத்திற்கண்டு, சத்தாமாத்திரனாய் நின்று சொப்பனாவஸ்தையோடு கூடியவனாய்ச் சரிக்கின்றான். (௩௫)

गते द्वैतभावे स्थिते शान्तिशेषे प्रकाशस्वभावेचिदानन्दभानौ ।
बहिर्वृत्तियुक्तोप्यहोमुत्प्रवृत्त स्सुषुप्तिस्थितश्चित्रवद्भाति योगी ॥३६॥

துவைதபாவம் நீங்கியதும் சாந்தி சேஷத்தில் நிலைத்ததும், பிரகாச சுபாவமுமான சிதாநந்தசூரியனில்,;உள்முகப்பிரவிருத்தனாகிய யோகி வெளிவிருத்தியோடு கூடியவனாயினும், சுழுத்தியில் நிற்பவனாய்ச் சித்திரம்போல் விளங்குகின்றான். (௩௬)

अनमृतोऽप्यनमृतक्षयमानसो विदितशान्ततनुर्निरहंकृतिः ।
गलितगन्धगुणस्सतुर्यभाक् वहति जीवति मुक्तिमभावनः ॥ ३७ ॥

அமிர்தனல்லனாயினும் அமிர்தனன்மை குறைந்தமனதுடையவனாய், அறியப்பட்ட சாந்தசரீரனாய், அகங்காரமில்லாதவனாய், கழிந்த குணமுள்ள அவன் துரியத்தையடைந்தவனாய் வகிக்கின்றான். முக்தியைப்பாவியாதவனாய் ஜீவிக்கின்றான். (௩௭)

संपूर्णकुम्भ इव वारिनिधायमध्ये
संशून्यकुम्भ इव विष्णुपदान्तराले ।
अन्तर्बहिः प्रथितपूर्णसुशून्यभाव-
स्सच्चित्रदीप इव भातितुरीययुक्तः ॥ ३८ ॥

துரியத்தோடு கூடியவன் சமுத்திர நடுவில் உள்ள நிறை குடம்போலும், ஆகாயத்தினிடையிலுள்ள வெறுங்குடம் போலும், உள்ளும் வெளியும் மிக நிறைந்து மிக்க சூநியத்தன்மையனாய் நல்ல சித்திரதீபம்போல் பிரகாசிக்கின்றான். (௩௮)

कैश्चिद्ब्रह्मेति कैश्चिद्धरिरिति शिव इत्यादि कैश्चित्
नानाभेदैः प्रोक्तस्संशून्यप्रकृतिपुरुषकालार्थरूपीति कैश्चित् ।

कैश्चिल्लोकैरन्यैर्विकल्पात्मकबहुवचनैर्देहयुक्तोऽपिनित्यं
मुक्तस्स्याद्यस्तुरीयातीतसमाख्यामवस्थां समेत्य ॥ ३९ ॥

எவன் துரியாதீதமென்னும் அவஸ்தையை யடைந்து சில ரால் பிரஹ்மமென்றும், சிலரால் சித்தென்றும், விஷ்ணுவென் றும், சிலரால் சிவன் என்பது முதலாகவும், சிலரால் நல்ல சூநிய பிரகிருதி புருஷ காலார்த்தவடிவமென்றும், சில ஜனங்களால் விகற்பவடிவ வேறு வெகு வசனங்களால் நாநாபேதங்களாகச் சொல்லப்படுபவனுய் தேகத்தோடு கூடியவனுயினும் நித்தியம் முக்தனுகின்றான். (௩௯)

तस्मात्सर्वप्रयत्नेन क्रमादभ्यासयोगतः ।
तुर्यातीतान्तामवस्थां समासाद्य सुखी भव ॥ ४० ॥

ஆதலால் சர்வப்பிரயத்தினத்தால் கிரமமாக அப்பியாச யோகத்தினுல் துரியாதீத முடிவான அவஸ்தையைச் செவ்வை யாய்ச் சாதித்துச் சுகியாவாய். (௪0)

सर्वावस्था गतो वापि सर्वावस्थां नसंस्मर ।
त्यज सङ्गमशेषञ्च मनोऽन्तर्बहिरन्वितम् ॥ ४१ ॥

சர்வாவஸ்தையினை யடைந்தவனுயினும் சர்வாவஸ்தையினை யும் ஸ்மரியாதே. மனது உள்ளும் வெளியுங் கூடியதாய்ச் சர்வ சங்கத்தினையும் விடு. (௪௧)

निवर्तयान्यकर्माणि शिवयोगं प्रवर्तय ।
सहजाममनस्कान्तां मुद्रां सच्चिन्मयीं भज ॥ ४२ ॥

அந்நியகர்மங்களை விடு. சிவயோகத்திற் பிரவர்த்தி. சச் சின்மயமும் ஸஹஜாமனஸ்காந்தருமான முத்திரையினைப்பஜி. ( )

आत्मानं गगनं कृत्वा बिन्दुं कृत्वा तथैव च ।
द्वयं समरसं कुर्यात् अमनस्ककलाहि सा ॥ ४३ ॥

ஆத்மாவை ஆகாயமாக்கி, விந்துவினையும் அவ்வாறே செய்து, இரண்டனையும் சமரஸமாக்குதல் வேண்டும். அதுவே அமனஸ்ககலையாம். (௪௩)

स्वप्नजागरणातीतं मृतजीवनवर्जितम् ।
स्वामिन् शिवामनस्काख्यं गमिष्यामः कदावयम् ॥ ४४ ॥

சுவாமி! சொப்பன ஜாக்கிரங்கட் கப்பாற்பட்டதும், மரண ஜீவனங்களின்றியதுமான சிவாமனஸ்க மென்பதனை எப்போது யாமடைவேம். (௪௪)

सचराचरजगदखिलं यत्किञ्चिदिदं तद्भवेत् मनोदृश्यः ।
मनसोऽप्युन्मनतां याति सतत्वं कथन्नभवेत् ॥ ४५ ॥

யாதொரு இந்த சராசரத்தோடுகூடிய ஜகத்துமுழுவது முண்டோ அது மனோதிருசியமாகின்றது. மனதும் உன் மனத் தன்மையை யடைகின்றது. அது எவ்வாறு தத்துவமாகாது? ()

अथवा यत्रमनस्संयाति हि तत्रैव तन्मनस्थाप्य ।
तत्कारणं लयस्स्यात् वृद्धिस्स्याद्वार्यमाणन्तु ॥ ४६ ॥

அல்லது எங்கு மனது செல்லுகின்றதோ அவ்விடத்திற்றானே அம்மனதை நிறுத்த அதன் காரணம் லயமாகின்றது. நீக்கப்படுவது விருத்தியாகின்றது. (௪௬)

यथेच्छया मनो गच्छेत् स्वयमेव निवर्तते ।
निरंकुशेन विधिना करटीव मदोत्कटः । ४७ ॥

தானே தடையின்றிய விதியினால் மதயானையினைப்போல் மனது இஷ்டப்படி சென்று தானேவிலகுகின்றது. (௪௭)

नाद एव लयश्रेष्ठः मुद्राणां खेचरी वरा ।
योगश्रेष्ठो निरालम्बो ह्यवस्थासुमनोन्मनी ॥ ४८ ॥

நாதமே லயங்களில் சிரேஷ்டமானதாம். முத்திரைகளில் கேசரி மேலானதாம். நிராலம்பம் யோகங்களுள் சிரேஷ்டமானதாம். அவஸ்தைகளுள் உன்மனீ சிரேஷ்டமாம். (சஅ)

राजयोगस्य मुद्रान्तामेत्य योगी मनोन्मनीम् ।
विरचत्यखिलान् लोकान् बालोन्मत्तपिशाचवत् ॥ ४९ ॥

இராஜயோகத்தின் மனோன்மணியான முத்திராந்தத்தினையடைந்து யோகி பாலர் பித்தர் பேயர் போல் சர்வ லோகங்களிலும் சஞ்சரிக்கின்றான். (சகூ)

जीवन्मुक्तिप्रकारस्य योग एव नचान्यथा ।
स एव सिद्धिदस्सम्यक्सर्वदर्शनसम्मतः ॥ ५० ॥

ஜீவன் முக்திப்பிரகாரத்திற்கு யோகமே சாதனம். வேறு வகையாவில்லை. அதுவே செவ்வையாய்ச் சித்தியைத் தருவதாம்; சர்வதரிசன (சாஸ்திர)ங்கட்கும் சம்மதமானதாம். (ருo)

मन्त्रलयावारम्भकघटसंज्ञापरिचयोहठस्स्यात् ।
समनिष्पत्तिस्मृतएवमहान् राजयोगस्तु ॥ ५१ ॥

மந்திரலயமிரண்டும் * ஆரம்பக கடமென்னும் பெயருள்ளனவாம். ஹடம் பரிசயமாகின்றது. பெரிய இராஜயோகமோ சமநிஷ்பத்தியென்றே கருதப்படுகின்றது. (ருக)

तस्मात्संसेव्य एवं विधइह यमिनांश्रेयसे योगमार्गो
ह्यालस्यं धूर्तसङ्गंस्वजनकुपितशास्त्रान्धकारोरुरोगान् ।
जित्वा मन्वन्तरायान् पुनरपि च महायोगजैश्वर्यसिद्धिम्
त्यक्त्वा स्थित्वा सुदेशे सुजनपरिवृतिऽबाधिते धर्मराज्ये ॥ ५२ ॥

---

* இங்கு ஓர் வகையாய்க் கூறப்பட்டுள்ள இந்த ஆரம்பகம், கடம், பரிசயம், நிஷ்பத்தியென்னும் நான்கவஸ்தைகளையும் ஹடயோகப்பிரதீபிகையின் நான்காம் உபதேசம் எo-வது சுலோக முதல் காண்க.

ஆதலால் யோகிகளின் சிரேயசின் பொருட்டு இத்தன்மைய யோகமார்க்கம் இங்கு செவ்வையாய்ச் சேவிக்கத்தக்கதாம். ஆலசியம், தூர்த்தசங்கம், ஸ்வஜனம், கோபிக்கப்பட்டது, சாஸ்திராந்தகாரம் பெரிய ரோகங்கள் என்பவற்றையும் மறுவந்தராயங்களையும் ஜெயித்து, மறுபடியும் மகாயோகத்தினுலுண்டாம் ஐசுவரிய சித்தியினை விட்டுத் தர்மராஜ்யத்தில் நல்ல ஜனங்களால் சூழப்பட்ட பாதிக்கப்படாத நல்ல தேசத்தில் இருந்துகொண்டு, (ருஉ)

तापत्रयं नवविधंव्यवहारभावाः षट्कौशिकानि षडमित्रकपञ्चकोशाः।
षड्भावजाविकृतयश्च षडूर्मयश्च निष्पन्नयोगमहतां भुवि न स्युरेव ॥

தாபத்திரயமும், ஒன்பது வகை வியவகாரபாவங்களும், ஷட்கோசங்களும், அறுவகைவர்க்கமும், ஐந்து கோசங்களும், ஆறு பாவங்களாலாகிய விகிருதிகளும், ஷடூர்மிகளும் நிஷ்பத்தியடைந்த யோகமகத்துக்களுக்கு இருக்கமாட்டா. (ருங)

महादीप्तवह्निर्दहेच्छुष्कपत्रं यथा पुण्यपापात्मकं सर्वकर्म ।
तथा निर्दहेत्क्षणाज्ज्ञानवह्निः ततोमुक्तिमायातिनिष्पन्नयोगी ॥५४॥

மகாப்பிரகாச நெருப்பு உலர்ந்த சருகினை எரிப்பதுபோலப் புண்ணியபாவவடிவ சகல கர்மங்களையும் ஞானக்கினி க்ஷணத்தில் எரித்துவிடுகின்றது. அதனுல் நிஷ்பத்தியடைந்த யோகி முக்தியையடைகின்றுன். (ருச)

अत्यल्पदीपस्सुमहत्तमस्तु विनाशयेद्योनिबिं हठाद्यथा ।
अल्पोप्यहो योगसमाधिरेष विनाशयेत्कर्म शुभाशुभन्तथा॥ ५५ ॥

எப்படி மிகச் சிறியதீபம் அழுத்தமான மிக்க பேரிருளை வலிந்து கெடுக்கின்றதோ, அதுபோல ஆச்சரியம்! இந்த யோக சமாதி அற்பமாயினும் சுபாசுபகர்மங்களை நாசஞ் செய்கின்றது. (ருரு)

यो यो योगसमुद्यतोऽवनितले वात्यन्तिकामापदम्
स्वर्लोकां समुपेत्य शाश्वतसुखं तत्रानुभूयस्वयम् ।
अभिजायेत च ततस्सतांश्रुतिमतां यस्मिन् कुले योगिनाम्
तुष्टिं प्राप्य निवर्तयेदधिभवं योगी शिवाख्यं परम् ॥ ५६ ॥

எவனெவன் யோகத்தைப்பயில்பவனாய் அவனிதலத்தில் மரித்து, சுவர்லோகத்தையடைந்து, சாசுவத சுகத்தினை இயல்பாயநுபவித்து, யோகியே! அதன்பின் சத்துக்களும் வைதிகருமான யோகிகளது குலத்தில் பிறக்கின்றான். துஷ்டி (சந்தோஷத்தை) அடைந்து யோகி சிவமெனப்படும் பரமாகிய துஷ்டியினை (சந்தோஷத்தினை) யடைந்து, அதிபவத்தினை நீக்குகின்றான். (ருகூ)

ब्रह्मणि परे हृदयमपि यस्य लीनम्
तस्य मातापितरौ विहरतां चरितार्थौ ।
तस्य कुलजास्स्युरनघा जयन्तिसर्वे
तस्य पदसङ्घटितभूरतिपविला ।. ५७ ॥

எவனுடைய இருதயம் பரப்பிரஹ்மத்தில் ஒடுங்குகின்றதோ, அவனுடைய மாதாபிதாக்கள் கிருதார்த்தர்களாகத்திரிக. அவனுடைய குலத்திற் பிறந்தவர்கள் பாபமற்றவராகின்றனர். எல்லோரும் வெற்றிபெறுகின்றனர். அவனுடைய பாதம் பட்ட பூமி மிகப்பவித்திரமாம். (ருஎ)

योगशास्त्रे रहस्यानि सिद्धसिद्धान्तपद्धतिः ।
संक्षेपेण कृता बोध्या शिवयोगप्रदीपिका ॥ ५८ ॥

யோகசாஸ்திரத்துள்ள இரகசியங்கள் சித்தசித்தாந்த பத்ததியாம். போதிக்கத்தக்கதான சிவயோகப்பிரதீபிகை சுருக்கமாகச் செய்யப்பட்டது. (ருஅ)

अभ्यासशूराय जितेन्द्रियाय शिवे गुरौ भक्तिसुनिश्चयाय ।
देयं रहस्यं शिवयोगशास्त्रं यो मूढदाता गुरुपातकी स्यात् ॥ ५९ ॥

இரகசியமான சிவயோகசாஸ்திரம் அப்பியாச சூரனும், இந்திரிய ஜயமுடையவனும், சிவனிடத்தும் குருவினிடத்தும் நல்ல பக்தி நிச்சயமுடையவனுமாகிய சிஷ்யனுக்குக் கொடுக்கத் தக்கதாம். எவன் மூடதாதாவோ அவன் குருபாதகியாகின்ருன். (ருக)

पुरबाणानजसायकान् समुद्रऋतून् करेषून् तथा
निधिबाणांश्च पञ्च पञ्चधा पटलिकास्वेवं शिवाङ्कं मया ।
परमित्यादिकशब्दजालविविधश्छन्दोभिरेतत्कृतं
गिरीनागाम्बकसङ्ख्ययापि सकलं धन्यैश्च योगान् बहून् ॥ ६० ॥

* புரபாணங்கள், அஜஸாயக (ஸ்ரீ பிரஜாபதிபாண)ங்கள், சமுத்திருதுக்கள், கர (கைகள்) பாணங்கள் அவ்வாறே நிதிபாணங்கள் என்பன ஐந்தாம் இவ்வகையாக நல்ல இலக்கம் என்ருல் ஐவகைப்படலங்களிலும் அமைக்கப்பட்டுளது. இது "பரம்"

---

* இதனைக் கணித சாஸ்திர முறைப்படி எழுத.

| | | | | |
|---|---|---|---|---|
| புரபாணமென்பது | ரு௫ | ஷை | ஷை | ரு௩-ஆம். |
| அஜஸாயகம் | க௫ | ஷை | ஷை | ௫க-ஆம். |
| சமுத்திருது | சக | ஷை | ஷை | கச-ஆம். |
| கரபாணம் | உ௫ | ஷை | ஷை | ௫உ-ஆம். |
| நிதிபாணம் | க௯ | ஷை | ஷை | ௯க-ஆம். |

இவைமுறையே ஐந்து படலங்களின் சுலோக இலக்கங்களாம்.

கிரிநாகாம்பகம் எஅஉ ஷை ஷை உஅஎ-ஆம் பக்கங்கள்)
இது இந்நூலின் மொத்த சுலோக இலக்கமாம்.

என்பதனை முதலாவுடைய சொற்றொடர்களான நாநாவித சந்தங்களால் கிரிநாககண்ணென்னும் எண்ணால் வெகு யோகம் ஐசுவரியங்களோடு செய்யப்பட்டது. (கூ0)

इति श्रीसदाशिवयोगीन्द्रविरचितायां शिवयोगदीपिकायां योगशास्त्रे राजयोगप्रकारे अमनस्कविधानां नाम पञ्चमः पटलः

॥ समाप्तश्चायं ग्रन्थः ॥

இவ்வாறு சதாசிவயோகீந்திரராற் செய்யப்பட்ட

சிவயோகப்பிரதீபிகை.

ஐந்தாம்படலம்

முடிந்தது.

சிவயோகப்பிரதீபிகை

முற்றுப்பெற்றது.